டெரிக் பிரின்ஸ்

பரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்?

Originally published in English under the title
"WHO IS THE HOLYSPIRIT"

Published by Derek Prince Ministries -Asia/Pacific
P.O.Box 2029, Christchurch, New Zealand 8140
admin@dpm.co.nz
Printed by Derek Prince Ministries - India

TA/0310/3000/SR

ISBN 978-81-906349-7-7

"LOP-SVKS"

"WHO IS THE HOLY SPIRIT" (Tamil)
"PARISUTHA AAVIYANAVAR ENBAVAR YAR?"

Published by permission in the Tamil language.
Translated into Tamil language by
Mr. Samuel Karunakaran

For orders & other enquiries please contact :
DEREK PRINCE MINISTRIES - INDIA
18/32 Mangammal Salai,
Renganagar, Trichy - 620 021.
Tamil Nadu, S.India.
E-mail: rhema@derekprince.in
Phone : 00-91-431-2459464 / 2457181

Cover Design - DPM-ASIA/PACIFIC

DPM

Derek Prince Ministries
www.derekprince.co.nz

பொருளடக்கம்

1

அவர் ஒரு நபர் எனினும் அவர் ஒரு நபரல்ல

தேவனைப் பற்றிய இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையிலான வெளிப்பாடுகள் வேதத்தில் உள்ளன. ஆனால் தேவன் நம்மைவிட "மாறுபட்டவர்". ஆதலால் வேதத்தில் தேவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ள வெளிப்பாடுகளை நாம் வேறுவிதமான முறையில் வெளிப்படுத்திக் கூற வேண்டும்.

தேவனின் தனித்தன்மையும் கூட்டுத்தன்மையும் ஒன்றுபட்டதாகவே உள்ளது. இந்த இரகசியத்தை வேதத்தின் முதல் வசனத்தில் நாம் காணலாம்: "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."[1] மூலமொழியாகிய எபிரெயத்தில் *ஏலோஹிம்* ("தேவனுக்கு" குறிக்கப்பட்ட பதம்) என்ற வார்த்தை பன்மையில் தேவனைக் குறிக்கும் பதம் ஆகும். ஆனால் "பாரா" (bara) என்ற வினைச்சொல் ஒருமைக்குக் குறிக்கப்படும் பதம் ஆகும். வேறுவிதமாகக் கூறினால் ஒருமையும் பன்மையும் ஒன்றாக இணைந்துள்ளது.

மேலும், ஆதியாகமம் 1:26இல், தேவனைப் பற்றி நாம் பார்க்கும்போது ஒருமையும் பன்மையும் கலந்த முறையில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்: "பின்பு தேவன்: **நமது** சாயலாகவும் **நமது** ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக . . . என்றார்." இங்கு "சொன்னார்" (Said) என்ற வினைச்சொல் ஒருமையையும் "நாம்," "நமது" என்ற பெயர்ச்சொல் பன்மையைக் குறிப்பதையும் நாம் காணலாம்.

இதேபோன்ற ஒருமையும் பன்மையும் கலந்து கூறப்பட்டுள்ள வாக்கியங்களை வேதத்தின் பிறபகுதிகளிலும் நாம் காணலாம். ஏசாயா தீர்க்கதரிசி ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் காட்சியைக் காணும்போது அவர் இவ்வாறு உரைக்கும் சத்தத்தைக்

கேட்கிறார். ''யாரை **நான்** அனுப்புவேன்? யார் **நமது** காரியமாய்ப் போவான்?"[2] இங்கு **"நான்"** என்ற சொல் ஒருவர் பேசுவதையும், **''நாம்''** என்ற சுட்டுச்சொல் ஒருவருக்கு அதிகமான பேர்களின் சார்பாக குறிப்பிடப்படுவதையும் நாம் காணலாம்.

வேதவாக்கியங்களில் மூன்று தனித்தன்மை கொண்ட நபர்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன். தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்த மூன்று பேரில் முதலாவதாக தனிப்பட்ட நபராகக் கூறப்பட்டுள்ளவர் ஆவியானவராகும்: ''தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்."[3]

வெளிச்சத்தைக் குறித்த "உவமை"

தேவனை நாம் ஒருபோதும் "விளக்கிக்" கூறமுடியாது. ஆனால் அவர் உண்டாக்கிய இந்த உலகத்தில் அவரை விளக்கிக் கூற ஏதுவாக அநேக "உவமைகள்" அவரால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்றுதான் **வெளிச்சமாகும்**. நம் அன்றாட வாழ்வில் **வெளிச்சம்** மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் நாம் அதைப் பற்றி அதிகமாக சிந்திப்பதில்லை. ஆனால் இதன்மூலம் பன்மையின் இருவகைகளை நாம் காணலாம்.

வெளிச்சத்திற்கு **மூன்று** பிரதான நிறங்கள் உண்டு: அவை நீலம், மஞ்சள் மற்றும் சிவப்பு. வானவில்லில் **ஏழு** நிறங்களைக் காணலாம்: வயலட், இண்டிகோ, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு. ஒளியின் நிற ஒருமைப்பாட்டில் வர்ணங்கள் இணைந்திருப்பதுபோல் **திரித்துவமும்** வானவில்லின் **ஏழு** நிறங்களைப் போல இணைந்துள்ளது.

வேதவாக்கியங்களில் ஏழு என்ற எண் பரிசுத்த ஆவியானவரோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 4:5இல் ''தேவனுடைய **ஏழு** ஆவிகளைப்'' பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஏசாயா 11:1-2இல் இயேசுவை மேசியாவாக எவ்வாறு பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறார் (அபிஷேகிக்கப்பட்டவர்) என கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரின் ஏழு

தனித்தன்மைகளை அவர் பட்டியலிடுகிறார்: **கர்த்தருடைய** ஆவியானவர் (தேவனின் தன்னிலையைப் பற்றிக் கூறும் ஆவியானவர்); **ஞானத்தின்** ஆவி; **உணர்வின்** ஆவி; **ஆலோசனையின்** ஆவி; **பெலனின்** ஆவி; **அறிவின்** ஆவி; **கர்த்தருக்குப் பயப்படுதலின்** ஆவி.

இதில் மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால்: ஞானமும் கர்த்தருக்குப் பயப்படுதலும் ஒன்றையொன்று சார்ந்தவைகள். இவைகள் இயேசுவிலும் காணப்பட்டது. இல்லையெனில் ஞானமானது பெருமைக்குரிய ஒன்றாக மாறிவிடும். "அறிவு இறுமாப்பை உண்டாக்கும் (ஒருவரை கொடூரமானவராக்கும்)."[4]

அப்போஸ்தலர் 13:2இல் பரிசுத்த ஆவியானவர் தேவனாகவே சித்தரிக்கப்படுகிறார். ''பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவரியனவர் திருவுளம் பற்றினார்." இங்கு பரிசுத்த ஆவியானவர், தேவனின் தனி நிலையில் கூறப்படுவதை நாம் காணலாம்.

மனிதனின் மீட்புக்காக தேவனின் முழு ஈடுபாடு

இயேசுவின் தியாகத்தின் மூலம் வீழ்ந்துபோன மனுக்குலத்துக்கு மீட்பு உண்டாக்குவதே தேவனுடைய கிருபையின் உன்னதமான வெளிப்பாடாகும். இந்த தெய்வீகத் திட்டத்தை நான் நன்கு கற்று அதன்மூலம் ஒரு பெரிய காரியத்தைக் கண்டுகொண்டேன். மீட்பின் ஒவ்வொரு நிலையிலும் தேவனுடைய ஒவ்வொரு ஆள்தத்துவமும் தங்களின் தனித்தன்மை கொண்ட செயல்பாடுகளை நிகழ்த்துவதைக் கீழ்க்கண்டவாறு நாம் காணலாம்:

1) இயேசு கருவில் உருவாகுதல். பரிசுத்த ஆவியானவர் மூலமாக பிதாவாகிய தேவன், கன்னி மரியாளின் கருவில் இயேசு உருவாகும்படி செய்தார். லூக்கா 1:35ஐக் காண்க.

2) இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம். யோவானின் ஞானஸ்நானத்திற்கு இயேசு தம்மை

ஒப்புக்கொடுத்தபோது பரிசுத்த ஆவியானவர் புறாவை போல் இறங்கினார். பிதா அவரை தனது குமாரன் என்று திருவுளம்பற்றினார். லூக்கா 3:21-22ஐக் காண்க.

3) இயேசுவின் ஊழியம். அப்போஸ்தலர் 10:38இல் பேதுரு இவ்வாறு கூறுகிறார்: ‘‘நசரேயனாகிய இயேசுவைத் தேவன் (பிதாவாகிய தேவன்) பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்.”

4) சிலுவையில் இயேசுவின் தியாகம். ‘‘நித்திய ஆவியினாலே (பரிசுத்த ஆவி) தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு (பிதாவிற்கு) ஒப்புக்கொடுத்த கிறிஸ்து.” எபிரெயர் 9:14ஐக் காண்க.

5) இயேசுவின் உயிர்த்தெழுதல். பிதாவாகிய தேவன் இயேசுவைப் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே உயிர்ப்பித்தார். ரோமர் 1:4; 8:11ஐக் காண்க.

6) பெந்தெகொஸ்தே. இயேசு தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு அவரிடமிருந்து பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்று காத்திருந்த சீஷர்கள்மேல் பொழிந்தருளினார். அப்போஸ்தலர் 2:33ஐக் காண்க.

மீட்பின் ஒவ்வொரு நிலையிலும், பரிசுத்த ஆவியானவர் தனது முக்கியமான மற்றும் தனித்தன்மை வாய்ந்த பங்கினை ஆற்றியுள்ளார். அவர் ‘‘கிருபையின் ஆவியானவர்” என்றும் “மகிமையின் ஆவியானவர்” என்றும் அழைக்கப்படுகிறார். கிருபை மகிமைக்கு நேராக வழிநடத்துகிறது. எபிரெயர் 10:29; 1பேதுரு 4:14ஐக் காண்க.

ஆள்தத்துவமானவர் மற்றும் ஆள்தத்துவமற்றவர்

பரிசுத்த ஆவியானவரின் தனித்தன்மைகளின் மற்றொரு விஷயம் நம்மை உய்த்து உணரும் அறிவை நமக்குத் தருகிறது. ஆவியானவர் ஒரு நபர் அதே நேரத்தில் அவர் ஒரு

நபரல்ல, அவர் ஆள்தத்துவமில்லாதவர் - "அவர்" என்றும் "அது" என்றும் கூறப்படுகிறது.

புதிய ஏற்பாடு நமக்குக் கிரேக்க மொழியில் கிடைக்கப் பெற்றுள்ளது. கிரேக்க மொழியில் மூன்று பால்கள் உள்ளன. ஆண்பால் (அவர்) பெண்பால் (அவள்) பொதுபான பால் (அது). இலக்கணப்படி, "ஆவி" என்பதற்கான கிரேக்க வார்த்தை *நியூமா* (pneuma) என்பதாகும். இது பொதுவான பால் ஆகும். எனவே, ''அது'' என்பதுதான் சரியான வார்த்தையாகும். இருப்பினும் "அவர்" மற்றும் "அது" ஆகிய இரு சொற்களுமே பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஆனால் அவள் என்று குறிக்கப்படவில்லை) உதாரணமாக யோவான் 16:13இல் கிரேக்க இலக்கண வரைமுறை ஒதுக்கி வைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் ''அவர்'' என்றும் ''அது'' என்றும் கூறப்பட்டுள்ளது: "சத்திய ஆவியாகிய **அவர்** வரும்போது ...."

ஆங்கில மொழியில் உள்ளதுபோல் கிரேக்க மொழியிலும் குறிப்பிட்டுச் சொல்லும் வார்த்தை ''the'' உபயோகப்படுத்தப்படுகிறது. (ஆனால் ரஷ்ய மொழியிலோ, இலத்தீன் மொழியிலோ அதற்கான வார்த்தை இல்லை.) கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் "பரிசுத்த ஆவியானவர்" என்ற வார்த்தைக்கு முன்னால் "the" என்ற ஆங்கில வார்த்தைக்கு இணையான வார்த்தை சில சமயம் குறிப்பிடப்பட்டும் சில சமயங்களில் அது இல்லாமலும் கூறப்பட்டுள்ளது. அல்லது ஆங்கிலத்தில் "the Holy Spirit" என்று கூறப்படுவதற்கும் "Holy Spirit'' என்று கூறப்படுவதற்கும் உள்ள வேறுபாடு போன்றதாகும்.

ஆங்கிலத்தில் ''Holy Spirit'' என்ற வார்த்தை ஒரு முற்றுப் பெறாததாகக் காணப்படுகிறது. எனவே, அனைத்து ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும் ''Holy Spirit'' என்ற வார்த்தைக்கு முன்பதாக ''the'' என்று சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. மூல கிரேக்க மொழிப் பிரதிகளில் இவ்விதம் இல்லாவிட்டாலும் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே, "the" என்ற வார்த்தை உள்ளதா இல்லையா என்பது மூல பதத்தைப் பார்த்தால்தான் நமக்குத் தெளிவாகும்.

கிரேக்கப் புதிய ஏற்பாட்டை நான் நன்கு படித்து தெரிந்துகொண்ட வகையில் பரிசுத்த ஆவியானவர் என்ற

வார்த்தைக்கு முன் ‘‘the’’ என்ற வார்த்தை இருந்தாலும் இல்லாவிட்டாலும் இரண்டுக்கும் முக்கிய வேறுபாடு உள்ளது என்பதை அறிந்துகொண்டேன். “பரிசுத்த ஆவியானவர்” என்ற வார்த்தைக்கு முன்னால் ‘‘the’’ என்ற வார்த்தை இல்லாதிருந்தால் அது ஓர் ஆளைக் குறிக்காமல் ஒரு உயிரினத்தையோ, ஒரு சக்தியையோ, ஒரு விசையையோ, ஒரு நிலைப்பாட்டையோ ஒரு செல்வாக்கான நிலையையோ குறிப்பதாக உள்ளது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்ற வார்த்தைக்கு முன்னால் ‘‘the’’ என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டிருந்தால், அவர் ஒரு ஆளாக சித்தரிக்கப்பட்டுள்ளார் என்பது பொருள்.

ஆள்தத்துவத்தின் மிக முக்கிய நிலைப்பாடு பேசும் சக்தியாகும். பெந்தெகொஸ்தே நாளின்போது பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது, சீஷர்கள் மூலமாக பல்வேறு பாஷைகளில் **அவர் பேசினார்**. இதன் மூலமாக அவர் ஒரு ஆளாக பூமியிலே வாசம் செய்யும்படி வந்தார் என்பது தெளிவாகிறது. அவர்தான் தற்போது தேவனுடைய நிரந்தர பிரதிநிதியாக பூலோகத்தில் வசித்து வருபவர்.

இதன் பிறகு, ஒரு விசுவாசியின் உடலில் ஒரு ஆளாக அவர் வசிக்க வரும்போது அவர் தமது நிலையை வெளிப்படுத்த இயற்கைக்கு மேலான மொழியில் அந்த விசுவாசியின் மூலமாக பேசுவார். “நான் ஒரு ஆளாக உன் உடலில் வசிக்கிறேன்” என்பதாக அவர் கூறுகிறார்.

இதன் காரணமாகவே பவுல், 1கொரிந்தியர் 6:19இல் ‘‘உங்கள் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்று அறியீர்களா?” எனக் கூறும்போது, ‘‘the’’ என்ற வார்த்தையை பரிசுத்த ஆவியானவர் என்ற வார்த்தைக்கு முன்பதாக உபயோகித்துள்ளார். பல பாஷைகளில் பேசுவது மட்டும் இயற்கைக்கு மேலான அனுபவமாகக் கருதக்கூடாது என்பதை பவுல் மிகவும் அழுத்தமாகக் கூறுகிறார். அதற்கும் மேலாக பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆளாக ஒரு விசுவாசியின் உடலில் வாசம் செய்யும்போது அதனை ஒரு பரிசுத்த ஆலயமாக்குகிறார் என்ற அந்த வெளிப்பாடுதான் மேலான அனுபவம் என்று கூறுகிறார். எனவே ஒவ்வொரு விசுவாசியின் கடமை என்னவென்றால் தனது உடலை பரிசுத்தமாகக் காத்துக்கொண்டு அதன்மூலம்

தேவனுடைய ஆலயமாக விளங்கச் செய்யவேண்டும்.

சபையில் தனது அதிகாரத்தைச் செலுத்தும் அந்த நிலையில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் குறிப்பிடுகையிலும் ''the'' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது: உதாரணமாக, அப்போஸ்தலரை அனுப்பும்போது, சபையின் மூப்பரை நியமிக்கும்போது, அப்போஸ்தல ஊழியங்களை நிறைவேற்றும்போது, பொதுவாக ஞானஸ்நானத்தின்போது, பரிசுத்த ஆவியில் நிரப்பப்படும்போது "the" என்ற வார்த்தை விடுபட்டுள்ளது. இதன்மூலம் இங்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இல்லாமல், ஒரு ஜீவனாக, ஒரு சக்தியாக வருணிக்கப்பட்டுள்ளார்.

கீழே நான் இருவகையான பட்டியல்களைத் தந்துள்ளேன்: முதலாவது, ஆங்கில வேதாகமத்தில் "பரிசுத்த ஆவியானவர்" என்ற வார்த்தைக்கு முன்பதாக "the" என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ள வாக்கியங்கள்; இரண்டாவது, ''the'' என்ற பதம் பயன்படுத்தப்படாத வாக்கியங்கள்.

"The" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்ட ஆங்கில வசனங்கள்

"பரிசுத்த ஆவியானவர்" என்ற வார்த்தைக்கு முன்பாக "the" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ள சில வசனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மத்தேயு 12:31 *". . . ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை." (மாற்கு 3:29ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்)*

மாற்கு 13:11 *". . . பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்."*

லூக்கா 3:22 *"பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டுபுறாவைப் போல அவர் (இயேசு) மேல் இறங்கினார் ..."*

லூக்கா 12:12 *''நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த*

ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார்."

யோவான் 14:26 "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்."

அப்போஸ்தலர் 2:38 ". . . அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."

அப்போஸ்தலர் 5:3 "அனனியாவே, . . . பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?"

அப்போஸ்தலர் 13:2 ". . . பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்."

அப்போஸ்தலர் 13:4 "அப்படியே அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டு ... போனார்கள்."

அப்போஸ்தலர் 15:29 ". . . பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது;"

அப்போஸ்தலர் 1 6:6 "அவர்கள் ... வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு, . . ."

அப்போஸ்தலர் 20:28 "ஆகையால், . . . பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்."

அப்போஸ்தலர் 21:11 "... என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்."

1 கொரிந்தியர் 6:19 "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், . . . அறியீர்களா?"

"The" என்ற வார்த்தை பயன்படுத்தப்படாத ஆங்கில வசனங்கள்

இங்கு "the" என்ற பதம் பயன்படுத்தப்படாத சில வசனங்கள் தரப்பட்டுள்ளன.

மத்தேயு 1:18 "... அவள் (மரியாள்) பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது."

மத்தேயு 3:11 "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." (மாற்கு 1:8; லூக்கா 3:16; யோவான் 1:33; அப். 1:5 ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

லூக்கா 1:15 "அவன் (யோவான் ஸ்நானன்) . . . தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்." (லுக்கா 1:41, 67; 4:1; அப். 2:4; 6:3, 5; 9:17; 13:9, 52 ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

லூக்கா 1:35 "பரிசுத்தஆவி உன்(மரியாள்) மேல் வரும்; . . . ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."

யோவான் 20:22 "அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்;"

அப்போஸ்தலர் 10:38 "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் . . ."

ரோமர் 14:17 "தேவனுடைய ராஜ்யம் ... நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது."

ரோமர் 15:13 "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, ..."

ரோமர் 15:15 ". . . புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, . . ."

1கொரிந்தியர் 12:3 ". . . பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக் கூடாதென்றும், . . ."

தீத்து 3:5 ". . . மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் . . ."

எபிரெயர் 2:4 "... பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், ..."

எபிரெயர் 6:4 "... பரிசுத்த ஆவியைப் பெற்றும்,"

2பேதுரு 1:21 "... தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."

யூதா 1:20 "... பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி,"

* * * * * * * * * *

கடைசியாக, பரிசுத்த ஆவியானவருக்கு வேத வாக்கியங்களில் வழங்கப்பட்டுள்ள சில பெயர்களை இங்கே குறிப்பிடுகிறேன்: **கிருபையின்** ஆவியானவர்; **மகிமையின்** ஆவியானவர்; **ஞானத்தின்** ஆவியானவர்; **சத்தியத்தின்** ஆவியானவர்; **சுய ஒழுக்கத்தின்** ஆவியானவர்.

இந்தப் பெயர்களைக் குறித்து தியானித்து வேறு பெயர்கள் ஏதேனும் உண்டா என்று ஆராய்ந்து நீங்களே கண்டுபிடியுங்கள். இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அவர் வாக்குப்பண்ணினதின்படியே தனது வாக்கை நிறைவேற்றியதற்காக அவரைத் துதியுங்கள்.

2

நித்தியமானவர், அனைத்தையும் அறிந்தவர், எங்கும் வியாபித்துள்ளவர்

இந்த அத்தியாயத்தில் தேவனின் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இன்னும் சற்று கூடுதலாகத் தெரிந்து கொள்வோம். பரிசுத்த ஆவியானவரின் தன்மைக் குறித்துச் சிறப்பான மூன்று காரியங்கள் உள்ளன. அவை: நித்தியமானவர், அனைத்தையும் அறிந்தவர், எங்கும் வியாபித்துள்ளவர்.

நித்தியமானவர்

நான் பங்குபெற்ற முதல் பெந்தெகொஸ்தே ஆராதனையின் முடிவில் பிரசங்கியார் என்னைப் பார்த்து, “நீ ஒரு பாவி என்று நம்புகிறாயா?” என்று கேட்டார். அந்தச் சமயத்தில்தான் நான் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் “விளக்கங்கள்” என்பது குறித்த எனது ஆராய்ச்சி முடிவுத் தொகுப்பினை முடித்து ஒரு தத்துவ மேதையாக இருந்தேன். எனவே என் மனதில் ‘பாவி’ என்பது குறித்த விளக்கம் என்னவென்பது பற்றிய எண்ண அலைகள் ஓடத்துவங்கின. அனைத்து விளக்கங்களும் நான் பாவி என்பதையே எடுத்து இயம்பின. எனவே நான் “ஆம், நான் பாவிதான்!” என்று மறுமொழி கூறினேன்.

பிறகு மீண்டும், அவர் என்னை நோக்கி, “கிறிஸ்து உனது பாவங்களுக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்கிறாயா?'' எனக் கேட்டார். இதைக்குறித்து யோசித்துவிட்டு, “பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த இயேசுகிறிஸ்துவின் மரணம், தற்போது எனது வாழ்நாளில் நான் செய்த பாவங்களுக்கு என்ன செய்ய முடியும்

என என்னால் எண்ணிப் பார்க்க இயலவில்லை'' என்று பதிலளித்தேன்.

ஆனால் அந்தப் பிரசங்கியார் உண்மையாகவே ஒரு ஞானவானாக இருந்தபடியால் அவர் என்னிடம் இதுகுறித்து விவாதிக்கவில்லை. ஆனால் அவர் எனக்காக ஜெபித்திருந்திருப்பார் என நம்புகிறேன்! சில நாட்களுக்குப் பின் எனக்கு இயேசு கிறிஸ்துவோடு நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இது என் வாழ்க்கையையே மாற்றியமைத்தது. குறிப்பாக வேதாகமம் ஒரு ஜீவனுள்ள, அர்த்தமுள்ள புத்தகமாக மாறிற்று.

சில நாட்களுக்குப் பின்பு நான் எபிரெயர் 9:14ஐ வாசித்துக் கொண்டிருந்தேன். ''**நித்திய ஆவியினாலே** தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்து ...'' உடனடியாக ''நித்தியம்'' என்ற வார்த்தையின் மகத்துவத்தை நான் உணரலானேன். அதன் அர்த்தம் அநேக நாட்கள் என்பதைக் காட்டிலும் மிகவும் கூடுதலான காலத்தைக் குறிப்பதாகும். காலத்தின் எல்லையைத் தாண்டி அதற்கும் மேலான நிலையாகும். மேலும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றையும் உள்ளடக்கியதாகும்.

இயேசுவானவர் தம்மை சிலுவையில் ஒப்புக் கொடுத்தபோது அவர் வாழ்ந்த காலத்திற்கு மட்டும் அவரது தியாகம் உரித்தானதாக இருக்கவில்லை. அது கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகிய முக்காலத்திலும் செய்யப்பட்ட பாவங்களுக்குப் பரிகாரமாக அமைந்தது. பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பின் நான் செய்த பாவத்திற்கும் இது பொருந்தும்.

''நித்தியம்'' என்ற கிரேக்கச் சொல்லுக்கு மிகவும் ஆழமான அர்த்தமுள்ளது. இந்த வார்த்தையானது *ஐயான்* (aion) என்ற பெயர்ச்சொல்லிலிருந்து வந்தது. இதிலிருந்துதான் *ஏயான்* (aeon) என்ற ஆங்கில வார்த்தை பெறப்பட்டது. *அயோன்* என்பது காலத்தை அளக்கும் வார்த்தையாகும். இந்த வார்த்தைக் கீழ்க்கண்ட வாக்கியங்களில் காணப்படுகிறது:

எபிரெயர் 7:24: ''என்றென்றைக்கும்'' (NKJவில் "நிரந்தரமாக") - தற்காலத்தைக் குறிக்கிறது.

யூதா 25: "இப்பொழுதும் எப்பொழுதும்" (NKJவில் இப்பொழுதும் எப்பொழுதும்)

கலாத்தியர் 1:5: "என்றென்றைக்குமுள்ள சதாகாலங்கள்" (NKJவில் நிரந்தரமாக எப்பொழுதும்)

கிரேக்க மொழியிலுள்ள வார்த்தைகளுக்கான சரியான ஆழமான அர்த்தத்தைத் தொனிக்கக்கூடிய பதில்களை ஆங்கில மொழிபெயர்ப்புகளில் உபயோகப்படுத்தவில்லை. இவைகளும் இவைகளைப் போன்ற மற்றவைகளும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. இரு மலைகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்குக்கு மேல் என்னால் ஏறமுடியாத உயரத்தில் உள்ள பனித்துளியைப் போல் இருப்பதாக நான் உணருகிறேன். ஒரு யுகத்திலே பல யுகங்கள் அடங்கியுள்ளன என்பதும், பல யுகங்களிலே வேறுபல யுகங்கள் உள்ளன என்பதும் என்னால் யூகிக்க முடியவில்லை. இருப்பினும், எல்லாவற்றிற்கும் மேலான நித்திய ஆவியானவர், அளவிட முடியாத கடந்த காலங்களிலிருந்து, அளவிட முடியாத எதிர்காலத்திற்குள்ளாக அவர் நடத்திச் செல்லுவார்.

தேவனைப் பரலோகத்தில் துதிப்பதை நான் இவ்வாறு புதிய கோணத்தில் காண்கிறேன்: "... (நித்தியமாக) இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்!"[5]

அனைத்தையும் அறிந்தவர்

பரிசுத்த ஆவியானவரின் நித்திய பண்புடன் இணைந்ததே அவருடைய சர்வ ஞானம். 1யோவான் 3:20இல் மிக ஆழமான, ஆனால் மிகவும் எளிதான ஒரு வெளிப்பாட்டினை அப்போஸ்தலர் கூறுகிறார்: **தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார்**. அவருக்குத் தெரியாத காரியம் ஏதும் இல்லை. பூமியிலுள்ள மிகச் சிறிய சிற்றுயிரிலிருந்து வானத்தின் கடைமுனையிலுள்ள நட்சத்திரம் வரை அவருக்கு மறைவானது எதுவும் இல்லை.

நம்மைப் பற்றி நமக்கே தெரியாத காரியங்களைத் தேவன் அறிவார். நமது தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கையைத் தேவன் அறிவார்.[6]

நினிவே பட்டணத்திலுள்ள மக்கள் தொகையைத் தேவன் அறிந்திருந்தார் (யோனா 4:11). யோனாவுக்கு நிழல் தந்த செடியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி அதனை நன்கு அறிந்திருந்தார். அச்செடி வாடிப்போவதற்குக் காரணமாக இருந்த புழுவை தேவன் அறிந்திருந்தது மட்டுமல்ல அதனைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.[7]

''கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" என்று 1 கொரிந்தியர் 2:9-10இல் பவுல் கூறுகிறார். மேலும், ''நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; **அந்த ஆவியானவர் எல்லாவற்றையும்**, தேவனுடைய ஆழங்களையும், அறிந்திருக்கிறார்'' என்று தொடர்ந்து கூறுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் ஏற்கெனவே இருந்த மற்றும் வரப்போகிற ஆழங்களின் ஆழங்களை மட்டுமல்ல உயரங்களின் உயரங்களை அளந்து அறிந்திருக்கிறார். அவரது ஞானம் எல்லையற்றது.

இந்த அளவற்ற ஞானத்தின் மூலமாகவே நாம் நம்மைக் குறித்த கணக்கைத் தேவனுக்கு ஒப்படைக்க வேண்டும். "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்."[8]

பரிசுத்த ஆவியானவரின் இந்த இயற்கைக்கு மேலான அறிவும் ஞானமும் இயேசுவின் இப்பூலோக ஊழியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. யூதாஸ்காரியோத்தைப் பற்றிய காரியத்தில் இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவும் ஞானமும் சிறப்பாகச் செயற்பட்டது. அவருடைய சீஷர்கள் இயேசுவிடம், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்''[9] என்று கூறியபோது, அவர் அவர்களுக்கு அளித்த பதில் மேசியா என்பவர் தனது சொந்த சீஷரில் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்படுவார் என்பதாக அமைந்தது: ''பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்.'' சீமோனின் குமாரனாகிய

யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்.''[10] யூதாஸ் அறிந்துகொள்வதற்கு முன்பாகவே பரிசுத்த ஆவியானவர் மூலமாக யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என அறிந்திருந்தார்.

இருப்பினும் இயேசுவானவர் இதைக் குறித்துப் பேசி யூதாஸை அனுப்பிவைக்கும் வரை யூதாஸால் தன்னுடைய திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. கடைசி விருந்தின்போது இயேசு, ''உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்." என எச்சரித்தார். அவன் யார் என்று கேட்டதற்கு இயேசு இவ்வாறு பதிலளித்தார்,

> *"நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான்'' என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்.*
>
> *அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்றார்.*

அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப் போனான் - இயேசுவைக் காட்டிக் கொடுக்க.[11]

இயேசு யூதாஸிடம் பேசி அவனை அச்செயலைச் செய்ய அனுப்பும்வரை யூதாஸால் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற இயலவில்லை என்பதை எண்ணி ஆச்சரியமடைகிறேன். இந்த நிகழ்ச்சி முழுவதிலும் காட்டிக் கொடுத்தவரல்ல, காட்டிக் கொடுக்கப்பட்டவரே அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

தேவனுடைய ஞானத்தின் முழுமையை அதிலும் குறிப்பாக வரும் காரியங்களைப் பற்றி முன்பதாகவே அறிந்துகொள்ளும் ஞானத்தைப் பற்றி சிந்திக்கும்பொழுது எந்தக் காரியம் நிகழ்ந்தாலும் தேவன் அனைத்தும் அறிந்தவர் என நாம் நம்பிக்கை கொள்ளலாம். தேவனுடைய ராஜ்யத்தில் எதுவும் நெருக்கடிநிலை என்றில்லை. தேவனுக்கு ஒரு காரியத்தின் முடிவு ஆரம்பத்திலேயே தெரியும் என்பது

மட்டுமல்ல அவரே ஆதியும் அந்தமுமாய் **இருக்கிறார்.**[12] அவர் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்.

குறிப்பாக, நித்தியத்தில் தன்னோடு இருக்க யாரைத் தெரிந்து கொண்டிருக்கிறாரோ அவர்களைத் தேவன் நன்கு அறிவார். “தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.”[13]

தேவனுடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும் அந்த மகிமையான நித்திய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் எவரையும் பார்த்து இயேசு, ‘‘நான் உன்னை இங்கு எதிர்பார்க்கவில்லை!’’ என்ற வார்த்தைகளோடு வரவேற்கமாட்டார். அதற்குப் பதிலாக, “மகனே, உனக்காக நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். கலியாண விருந்துக்கு நீ வரும்வரை நாங்கள் பந்தியில் உட்கார முடியாது’’ என்று கூறுவார்.

அந்த மகிமையான விருந்து ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் யாருக்காக ஆயத்தம் பண்ணப்பட்டதோ அவர்கள் பெயர் அங்கு பொறிக்கப்பட்டிருக்கும் என நான் நம்புகிறேன்.

மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முடிவு பெறும்வரை தேவன் பொறுமையுடன் காத்திருப்பார், ‘‘ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனம்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.”[14]

எங்கும் வியாபித்துள்ளவர்

தேவன் எங்கும் **வியாபித்துள்ளவர்** என்பதற்கு அவர் ஒரே சமயத்தில் எல்லா இடத்திலும் உள்ளவர் என்பது பொருள். எரேமியா 23:23-24இல் தேவன் தம்மைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

“நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ” என்று கர்த்தர் சொல்லுகிறார், “எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக்கூடுமோ” என்று கர்த்தர் சொல்லுகிறார்; “நான்

வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இது எப்படி முடியும்? தேவன் வானத்தில் தமது சிங்காசனத்தில், இயேசு தமது வலதுபாரிசத்தில் இருக்குமாறு வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். அப்படியானால், வானத்திலும் பூமியிலும் தமது பிரசன்னத்தினால் எப்படி நிரப்ப முடியும்?

சங்கீதம் 139:7-12இல் தாவீது இதற்கான விடையைக் கூறுகிறார். முதலாவது அவர் இவ்வாறு வினவுகிறார்:

உம்முடைய ஆவிக்கு மறைவாக *எங்கே போவேன்?* ***உம்முடைய சமுகத்தைவிட்டு*** *எங்கே ஓடுவேன்?*

தம்முடைய ஆவியினால் தேவன் ஒரே சமயத்தில் எங்கும் நிறைந்து காணப்படுகிறார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. பிறகு தாவீது கீழ்க்கண்டவாறு தனது விரிவான விளக்கத்தைத் தருகிறார்:

நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

நாம் எங்கு சென்றாலும் தேவன் தமது ஆவியினால் அங்கு காணக்கூடாதவராக, அநேக முறை உணரக்கூடாத நிலையிலும் ஆனால் தப்பிச் செல்லாத வகையிலும் பிரசன்னமாக இருப்பார். அவிசுவாசிக்கு இது பயத்தை உண்டுபண்ணும் காரியமாக இருக்கும். ஆனால் விசுவாசிக்கோ ஆறுதலளிப்பதாகவும், பலப்படுத்துவதாகவும் உள்ளது. நாம் எங்கிருந்தாலும் "அங்கேயும் அவருடைய கை நம்மை நடத்தும், அவருடைய வலதுகரம் நம்மைப் பிடிக்கும்."

புதிய ஏற்பாட்டில் இயேசு தாமே இந்த நிச்சயத்தை நமக்குத் தருகிறார்: “நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.”[15] சில சமயங்களில் அவரது பிரசன்னத்தை நம்மால் உணரமுடியாமலிருக்கலாம். ஆனால் அவர் தமது பரிசுத்த ஆவியின் மூலமாக அங்கே பிரசன்னமாக உள்ளார். நம்முடைய சூழ்நிலைகள் நம்மைச் சுற்றி இருளாக இருக்கலாம், ஆனால் ‘‘உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது . . .”

நமது சரீரப்பிரகாரமான உணர்வுகளைச் சார்ந்ததாக இல்லாமல் ஆழமான உள் உணர்வுகள் மூலம் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய அறிவை ஏற்படுத்திக் கொள்ள நாம் பழகிக் கொள்ள வேண்டும். நமது உணர்வுகள் அவரது பிரசன்னத்தை அறிவிக்காதபோதும் அல்லது அதனை மறுத்தாலும் நமது ஆவியின் அடித்தளத்தில் உள் உணர்வுகள் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உணரச்செய்யும். அப்பொழுது ஏன் பரிசுத்த ஆவியானவருக்குத் “தேற்றரவாளன்’’[16] அல்லது “உதவியாளர்’’[17] என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கான காரணத்தை முழுமையாக நாம் அறிந்துகொள்ள முடியும். பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியதற்கு நன்றி கூறுவதன் மூலம் இந்த அத்தியாயத்தை முடிப்பதைவிட வேறு சிறந்த வழி இருக்கமுடியாது - என்னோடு நீங்களும் இணைந்து கொள்வீர்களா?

3

தூய்மைப்படுத்தும் பணியாளர்

பரிசுத்த ஆவியானவர் தம்மை வேதவாக்கியங்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். அவைகள் அவரைப் பற்றி என்ன கூறுகின்றன?

பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய முக்கிய வெளிப்பாடு அவரது பெயரில் உள்ளது: அவர் **பரிசுத்தர்**. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த செய்தி, வெளிப்பாடு மற்றும் ஒவ்வொரு அசைவையும் இந்த நிலையின் அடிப்படையிலேயே நாம் நிதானித்து அறியவேண்டும்: **அவருடைய பரிசுத்தத்திற்கு ஈடு இணை உண்டா?**

"பெந்தெகொஸ்தே" முதல் "கரிஸ்மேடிக் கொள்கை" வரை

"பழகப்பழக பாலும் புளிக்கும்" என ஒருவர் கூறினார். இக்கூற்று ஆவி சம்பந்தப்பட்ட காரியங்களிலும் உண்மையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, பெந்தெகொஸ்தே இயக்கத்திற்குப் பொருந்துவதாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் ஆவியின் வரங்கள் மற்றும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகிய காரியங்கள் சபையில் தாக்கத்தை ஏற்படுத்தியபொழுது "பெந்தெகொஸ்தே" என்று கூறுவது நாகரீகமானதாகவோ பிரபலமானதாகவோ இருக்கவில்லை. ஆகவே இதில் ஒரு கறை படிந்திருந்தது. இதற்கென ஒரு விலை கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது.

ஆரம்பத்தில் பெந்தெகொஸ்தே மக்கள் பெரும்பாலும் அதிகம் படித்தவர்களாக இருக்கவில்லை. அவர்கள் ''வாழ்க்கையின் தவறான பகுதியிலிருந்து வந்தவர்கள்.'' அவர்கள் சொன்ன, செய்த சில காரியங்கள்

முட்டாள்தனமானவை. அவர்களின் பரிசுத்தத்தைக் குறித்த சிந்தனை சரியானது என்பதாக அவர்கள் நினைத்தனர். ஆனால் அவர்கள் அதற்கான விலை கொடுத்தனர். அவர்களுடைய அனுபவமானது மலிவானதல்ல.

இருபதாம் நூற்றாண்டின் காலப்போக்கில் இதில் மாற்றம் ஏற்பட்டது. குறிப்பாக "சடங்காச்சார" கிறிஸ்தவர் தோன்றிய பிறகு இம்மாற்றம் அதிகரித்தது. "பெந்தெகொஸ்தேக்குப்" பதிலாக "சடங்காச்சார" கிறிஸ்தவம் நல்ல மதிப்பைப் பெற்றது. நாளடைவில் கிறிஸ்தவத்துக்கு மட்டுமல்லாது மற்றவைகளுக்கும் இப்பெயர் வழங்கலாயிற்று. ஒருமுறை ஓர் அரசியல்வாதிக்கு இப்பெயர் கூறப்படுவதை நான் முதன்முறையாக ஒரு செய்தி நிறுவன ஒலிபரப்பில் கேட்டேன்.

இதில் தேவையானதும் தேவையற்றதும் இருக்கின்றன. தேவையானதில் ஞானஸ்நானமும் ஆவியின் வரங்களும் கிறிஸ்துவின் சரீரத்தோடு தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. தேவையற்றதில் சில ஊழியங்களிலும், பயிற்சிகளிலும் "பரிசுத்தத்தைக்" காண முடிவதில்லை. சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன:

1. *கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களுக்கு உபயோகப்படுத்தும் வார்த்தைகள் சம்பந்தம் இல்லாதவைகளாகவும் சரியில்லாதவைகளாகவும் இருக்கின்றன.*

2. *ஊழியங்கள் ஆதாயத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. உறுதிமொழிகள் நிறைவேற்றப்-படுவதில்லை.*

3. *பரிசுத்த ஆவியானவரைக் குறித்த வெளிப்பாடுகள் மிகவும் கவர்ச்சிகரமாகவும் உண்மைக்கு மாறாகவும் உள்ளது.*

இத்தகைய நிலைகளில் காணப்படும் கிறிஸ்தவ ஊழியங்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதில்லை. தன்னலமும், பேராசையும் மனித இயல்புதானே. இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் இதுதான் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு என்று ஏற்றுக்கொள்வதுதான் என்னை மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த உண்மையான பார்வையை நாம் காணும் நேரம் வந்துவிட்டது. அவர் எப்படிப்பட்டவர்?

அவர் தாழ்மையான, சுத்திகரிக்கும் வேலையாள்

தெய்வீகத்தின் ஒரு பகுதி பணிவிடை செய்யும் தன்மை என்பதை நான் முதலாவது அறிந்து கொண்டபொழுது நான் அதிர்ச்சியடைந்த சம்பவத்தை நினைவு கூறுகிறேன். அநேகர், பணிவிடைக்காரனாயிருப்பதைத் தவிர்க்க வேண்டிய ஒன்றாகவும், கூலிக்காரனைப் போன்றதாகவும், கீழ்த்தரமானதாகவும் எண்ணுகிறார்கள். இத்தகைய நிலைப்பாடு நமது இன்றைய கலாச்சாரத்தைக் கெடுக்கின்ற ஒரு சக்தியாக உள்ளது. மேலும் இத்தகைய கண்ணோட்டம் தவறானதாகும்.

பணிவிடை செய்தல் என்பது ஒரு காலத்தில் உருவானதல்ல, ஆனால் இது நித்தியமானது; பூலோகத்துக்குரியதல்ல, ஆனால் பரலோகத்துக்குரியது. குமாரனாகிய இயேசு நித்தியமான, மகிழ்ச்சியான, விருப்பத்திற்குரிய, கீழ்ப்படிதலான பிதாவின் ஊழியக்காரராவார். பரிசுத்த ஆவியானவரோ பிதாவுக்கும் குமாரனுக்கும் ஏற்ற சுத்திகரிக்கும் பணிவிடைக்காரர். அவர் யாரையும் ''பழிவாங்குபவராகவோ'' தன்னுடைய "உரிமைகளைக்" கோருபவராகவோ இருப்பதில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்து முடிப்பவர். அவர் ஊழியஞ்செய்கிற தேவன்!

இது ஆதியாகமம் 24ஆம் அதிகாரத்தில் ஆபிரகாம் தனது மகன் ஈசாக்குக்காக பெண் கொண்ட விதத்தின் மூலம் விளக்கப்படுகிறது. இங்கு நான்குவிதமான காரியங்களை நாம் காணலாம். ஆபிரகாம் பிதாவாகிய தேவனுக்கும், ஈசாக்கு தேவனுடைய குமாரனாகிய இயேசுவுக்கும், ரெபேக்காள் இயேசுவின் சபையாகிய மணவாட்டிக்கும் ஒப்பிடப்பட்டுள்ளனர்.

ஆனால் ஆபிரகாமின் வேலைக்காரன் நிலை என்ன? இங்கே அவர் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் அவருடைய பங்கு மிகவும் முக்கியமானது. அவர் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பவராவார். வேலைக்காரன் என்ற முறையில் அவருக்கு மிகவும் முக்கியமான பணி இருந்தது: மணவாட்டியாகப் போகிற அந்த இளம் பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டிய

பொறுப்பு அவருக்கு இருந்தது. அப்பெண்ணைப் பேசி முடித்து, அலங்கரித்து, பாதுகாப்பாக மணவாளனிடம் கொண்டுவர வேண்டியது அவர் பொறுப்பு.

இதேபோன்ற ஒரு நோக்கத்திற்காகவே பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் பூமியில் அருளப்பட்டார். அவர் வந்ததின் முக்கிய நோக்கம்: சபையாகிய கிறிஸ்துவின் மணவாட்டியைக் கண்டுபிடித்து, நியமித்து, அலங்கரித்துப் பாதுகாப்பாக பிழையற்ற, மாசற்ற, பரிசுத்தமான இயேசுவிடம் ஒப்படைக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான குணாதிசயம் என்னவென்றால் தன்னை முக்கியப்படுத்தமாட்டார். அவரைப்பற்றி இயேசு கூறின சில காரியங்களை நாம் காண்போம்: ''... அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்."[18] "... அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்ட யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.''[19] ''அவர் என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்."[20]

வேத வாக்கியங்களில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய வெளிப்பாடுகளில் மிகவும் முக்கியமானது, **ஒருவரும் பரிசுத்த ஆவியானவரை நோக்கி ஜெபித்ததாகக் கூறப்படவில்லை**. இயேசு தமது சீடருக்குக் கற்றுக்கொடுத்த மாதிரி ஜெபத்தின் ஆரம்ப வரிகள் ''எங்கள் பிதாவே'' என்பதாகும். இயேசுதாமே கொடுத்த வாக்குத்தத்தம்: "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்."[21]

வேத வாக்கியங்களில் காணப்படும் அனைத்து ஜெபங்களும் பிதாவாகிய தேவனை மையப்படுத்தியவைகளாக இருக்கின்றன. நமது ஜெபங்களின் மூலமாக பிதாவாகிய தேவனிடத்தில் நாம் சேரவேண்டும் என்பதே பரிசுத்த ஆவியானவரின் ஊழியமே தவிர, வேறு ஒரு மாற்று இலக்கை நோக்கி நம்மை நடத்திச் செல்லமாட்டார். நாம் ஆவியினாலே ஜெபம்பண்ண வேண்டுமே தவிர ஆவியினிடத்திலல்ல. (எபேசியர் 6:18ஐக் காண்க.)

சமீப காலமாக சில சபைகள் இந்த வேத வாக்கியங்களுக்கு மாறாக நடக்கின்றன. பிதா மற்றும்

குமாரனை மையப்படுத்துவதிலிருந்து விலகி, ஆவியானவரை மையப்படுத்துகின்றன. அநேக பாடல்களும் வேதவாக்கியங்களின் கருத்துக்களை எடுத்துரைக்காமல் ஆவியானவரை நோக்கி பாடப்படும் பாடல்களாகவே அமைந்துள்ளன. பெரும்பாலும் கூட்டம் நடத்துபவர்களை முக்கியப்படுத்துவனவாகவே உள்ளன. இத்தகைய மறைமுகமான விளம்பரமற்ற முக்கியப்படுத்தும் செயல்கள் கர்த்தருடைய பிள்ளைகளை ஆபத்துக்கு நேராகக் கொண்டு செல்கின்றது. இதனை அநேகர் உணர்ந்து கொள்வதில்லை.

நாம் இரு முக்கிய அடிப்படைக் கருத்துகளை அறிந்துகொள்ள வேண்டும். முதலாவது, பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் தனிமனிதனின் முக்கியத்துவத்திற்குத் துணைபோகமாட்டார். இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவர் தன்னை நோக்கிக் கவர்ந்திழுக்கும் காரியங்களில் ஈடுபடமாட்டார். அவர் எப்போதும் நம்மை இயேசுவுக்கு நேராகவே நடத்துவார்.

எப்பொழுதெல்லாம் இவ்விரு கருத்துக்களும் பின்பற்றப்படவில்லையோ அதன் விளைவுகள் மாம்ச எழுச்சியும் தனிப்பட்ட முறையில் ஒருவருடைய உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவே அமையுமே ஒழிய அதில் உண்மையான பரிசுத்தத்தைக் காண முடியாது. இன்னும் அதிகமான அபாயகரமான காரியம் என்னவென்றால் இது பிசாசின் காரியங்களுக்கு வழிவகுத்து அதன்மூலம் பிசாசுகளின் செயற்பாடுகள் அதிகரிக்கும்.

பட்சிக்கிற அக்கினி

பரிசுத்த ஆவியானவர் தம்மை வெளிப்படுத்தும் மற்றுமொரு காரியம் *அக்கினியாகும்.* வேதத்தில் பரிசுத்த ஆவியானவர் கடைசியாக வெளிப்பட்ட இடம் “தேவனுடைய . . . **ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்துக்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன.**”[22]

எபிரெயர் நிருப ஆக்கியோன் மிகவும் எளிய, ஆனால் மிகச் சிறப்பான ஒரு காரியத்தைக் கூறுகிறார்: “நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே.”[23] தேவன் **அக்கினியைப்** போல உள்ளார் என்று அவர் கூறாமல் அவர்

அக்கினியாய் இருக்கிறார் என்று கூறுகிறார். இதனாலேயே, “நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்.”[24] அடிமைக்குரிய பயமல்ல, ஆனால் “சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமான கர்த்தருக்குப் பயப்படும் பயம்.”[25]

எபிரெய ஆக்கியோன் பிதாவாகிய தேவனைப் பற்றியோ குமாரனாகிய தேவனைப் பற்றியோ கூறவில்லை. அவர் பரிசுத்த ஆவியாகிய தேவனைப் பற்றிக் கூறுகிறார். அவர் அக்கினியாய் இருக்கிறார் - பட்சிக்கிற அக்கினி.

இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்தில் அநேக இடங்களில் பரிசுத்த ஆவியானவர் அக்கினியாய் இறங்கி வந்ததை நாம் காண்கிறோம். வனாந்திரத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில் ஆரோன் சர்வாங்க தகனபலிக்கான காரியங்களை ஆயத்தம் செய்தபோது,

> *கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்துவிட்டது; ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள்.*[26]

மேலும், சாலொமோன் தான் கட்டிய ஆலயத்தின் பிரதிஷ்டையின்போது ஜெபித்து முடிக்கையில்,

> *அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது.*[27]

பிறகு, கர்மேல் பர்வதத்தில் எலியாவின் ஜெபத்திற்கு தேவன் பதிலளிக்கையில்,

> *அப்பொழுது: கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும்*

நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" என்றார்கள்.[28]

ஒவ்வொரு முறையும் அக்கினி இறங்கியபோது மக்கள் முகங்குப்புற விழுந்தார்கள். அவர்கள் ஏதோ ஆவிக்குரிய வெளிப்பாட்டினால் அப்படிச் செய்யவில்லை. பட்சிக்கிற அக்கினியாய் இறங்கிய தேவனுடைய - பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய - பிரசன்னத்தினாலேயே அவ்வாறு செய்தார்கள். அவருடைய பிரசன்னத்தினால் அவர்களால் நிற்க முடியவில்லை.

சுத்திகரிக்கவா? அல்லது அழிக்கவா?

அக்கினிக்கு இரு மாறுபட்ட கூறுகள் உள்ளன. அக்கினி பயனுள்ளது. அதேசமயம் ஆபத்தானது. அக்கினி சுத்திகரிக்கும் ஆனால் அதேசமயம் அழிக்கவும் செய்யும்.

பரிசுத்த ஆவியானவரின் அக்கினியும் அதேபோலத்தான். கீழ்ப்படிகிறவர்கள் மேல் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பொழிந்து அவர்களுக்குத் தேவையானவைகளை அவர் செய்கிறார். சுய சித்தத்தை நிறைவேற்றுபவர்கள் மீது தேவனுடைய கோபாக்கினையையும் நியாயத்தீர்ப்பையும் கொண்டு வருவார்.

ஆரோனின் பலியின் மீது அக்கினி பற்றி எரிந்தவுடன் கீழ்க்கண்டவாறு நடந்ததாக வேதம் கூறுகிறது:

பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்.[29]

எத்தனை பயங்கரமான ஒரு பாடம்! ஆரோன் கீழ்ப்படிதலோடு படைத்த பலியின் நெருப்பு கர்த்தருடைய

ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அவருடைய இரு குமாரர்கள் தேவனுடைய சமூகத்தில் ''அந்நிய (பரிசுத்தமில்லாத) அக்கினி''யோடு பிரவேசித்தபோது உடனடியான மரணத்தைக் கொண்டு வந்தது.

நாம் எவ்வாறு தேவனிடம் சேரவேண்டும் என அவர் ஏற்கெனவே கூறியுள்ளார்: "பயத்தோடும் பக்தியோடும்"[30] "நாம் இருதிறத்தாரும் (யூதர்களும் புறஜாதிகளும்) ஒரே **ஆவியினால்** (பரிசுத்தஆவி) பிதாவிடம் சேருகிறோம்."[31]

பரிசுத்த ஆவியல்லாது சுயசித்தத்தின்படி வேறு ஆவியில் தேவனிடத்தில் சேருவதுதான் ''அந்நிய அக்கினியாகும்." எனவே இது ஒரு முக்கியமான வாழ்வா சாவா என்னும் பிரச்சனையாகும். வேறு பொய்யான ஆவிக்கும் பரிசுத்த ஆவிக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்ந்து பரிசுத்த ஆவியானவர் எவ்வாறெல்லாம் தன்னை வெளிப்படுத்துவார் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம்.

அனைத்து இஸ்ரவேலரைக் காட்டிலும் ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தாங்கள் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதன் அடிப்படையில் தேவனிடத்தில் சேருவதற்கு சிறப்பு உரிமையுள்ளவர்களாகத் தங்களைப் பற்றி நினைத்திருக்கலாம். பிறப்பு உரிமைப்படி ஆரோனுக்கு அடுத்ததாக நாதாப் பிரதான ஆசாரியனாக பதவிக்கு வந்திருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதற்கு மாற்றுப் பொருளாக ஒரு சபையின் சிறப்போ, வியத்தகு அற்புதமோ அல்லது மக்களின் வேண்டுதலே அமைய முடியாது. "எவ்வளவு உயர்வானவர்களானாலும், சிறந்தவர்களானாலும்,'' தேவன் தம்மிடம் சேருவதற்கு நியமிக்கப்பட்ட நிபந்தனைகளை கடைப்பிடிக்காமல் இருக்க யாருக்கும் உரிமை அளிப்பதில்லை. அவர்கள் அவ்வாறு நடந்தால் விளைவுகளை அனுபவித்தே ஆகவேண்டும்.

நாதாபும் அபியூவும் தங்களைத் தாங்களே உயர்த்தியதனால் கிடைத்த தேவனுடைய நியாயத்தீர்ப்பு நமக்கு எதைக் காட்டுகிறது என்றால் அவர் நியமித்துள்ள காரியங்களை யார் சரியாகக் கடைப்பிடிக்கிறார்களோ அவர்களுக்கே பரிசுத்த ஆவியானவர் தமது ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளுகிறார். இன்று முதலாவது தேவையான காரியம் என்னவென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உயர்த்தி

மகிமைப்படுத்த வேண்டுமென்பதாகும். இரண்டாவது, பரிசுத்த ஆவியானவர் தாமே வேதவாக்கியங்கள் மூலமாக நமக்கு வெளிப்படுத்தின சட்டதிட்டங்களைக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

4

சத்திய ஆவி

நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனைஅவர் உங்களுக்குத் தந்தருளுவார் - உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். [32]

ஒரு தெய்வீக உதவியாளரை அனுப்புமாறு இயேசு பிதாவிடம் கேட்கப்போவதாக தமது சீஷருக்கு வாக்குக் கொடுத்தபோது அந்த உதவியாளருக்கு அவர் ஒரு சிறப்புப் பெயரைச் சூட்டுகிறார்: "சத்திய ஆவி." ஆனால் அதேசமயத்தில் இந்த உலகம் அந்த உதவியாளரை ஏற்றுக்கொள்ளாது என்று எச்சரித்தார்.

அதற்கான இரு காரணங்களை வேதம் நமக்குக் கூறுகிறது. முதலாவது, மனிதர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்து தேவனை விட்டுத் தூரம் சென்றபின்பு அவர்கள் தங்கள் அநீதியை அந்தச் சத்திய ஆவியானவர் வெளிப்படுத்துவதால் அதனை ஏற்றுக்கொள்ள மனமற்றவர்களாக இருந்தார்கள். எனவே அவர்கள் "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறார்கள்."[33]

இரண்டாவது, தேவனுக்கு விரோதமான பாவம் செய்யும்போது மனுக்குலமானது, இக்காலத்தின் தேவனாகிய, "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற சாத்தானுடைய"[34] கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுகிறது. மனுக்குலத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்குச் சாத்தான் பயன்படுத்தும் முதல் ஆயுதம் வஞ்சித்தலாகும். ஏமாற்றக்கூடிய

விஷயத்திலிருந்து அவனைத் தோற்கடித்தால் அவனால் யாருக்கும் எதுவும் செய்யமுடியாது. ஆனால் அவர்களுக்காக நித்திய அக்கினியில் ஓர் இடத்தை வேண்டுமானால் ஆயத்தம் செய்து வைக்கலாம்!

பல நூற்றாண்டுகளாக, “சத்தியம்” என்ற வார்த்தைக்கு மனிதனால் சரியான விளக்கம் அளிக்க முடியாமலிருந்தது. ஆனால் வேதம் இதற்கு மூன்றுவிதமான அர்த்தத்தைக் கொடுக்கிறது. முதலாவதாக இயேசு சொன்னார், “**நானே** சத்தியம்.’’[35] இரண்டாவதாக பிதாவை நோக்கி அவர் ஜெபிக்கும்போது சொன்னார், ‘‘**உம்முடைய வசனமே** சத்தியம்.”[36] மூன்றாவதாக, **(பரிசுத்த) ஆவியானவரே** சத்தியம்”[37] என்று யோவான் கூறுகிறார்.

ஆவிக்குரிய காரியத்தில் சத்தியத்திற்கு ஒன்றுக்கொன்று இணையான மூன்று பெயர்கள் உண்டு: இயேசு, வேதவசனம், பரிசுத்த ஆவியானவர். இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும்பொழுது நாம் சத்தியத்தினிடம் - முழுமையான சத்தியத்தினிடம் - வந்துவிட்டதாக நாம் அறிந்துகொள்ளலாம். நாம் ஒரு முடிவுக்கு வரும் முன்பதாக இம்மூன்று இணையான காரியங்களையும் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். எந்தவொரு ஆவிக்குரிய காரியத்தைக் குறித்தும் நாம் மூன்று கேள்விகள் மூலமாக விவரம் அறிந்து கொள்ளலாம்:

இக்காரியம் இயேசுவை உண்மையான ரீதியில் பிரதிபலிக்கிறதா?

இது வேதத்தோடு ஒத்துப்போகிறதா?

பரிசுத்த ஆவியானவர் இதைக் குறித்து சாட்சி பகருகிறாரா?

சத்தியத்தைக் குறித்த இந்த மூன்று காரியங்களோடும் சபையானது இசைந்து உள்ளதா என்பதை சரிபார்த்து செயல்பட்டிருந்தால் அநேக தவறுகளையும் ஏமாற்றங்களையும் சபையானது தவிர்த்திருந்திருக்கலாம். ஒரு ஆசிரியர் கவர்ச்சியான ஓர் இயேசுவின் படத்தை நல்ல மாதிரியான படமாக வரைந்தால் மட்டும் போதாது. அல்லது ஒரு போதகர் வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டு தனது சபையாருக்கு சிறந்த செய்தியளித்தால் மட்டும் போதாது. அல்லது ஒரு தேவனுடைய ஊழியர் சிறந்த, இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை மக்களுக்கு முன்பாக

நடத்திக்காட்டினால் மட்டும் போதாது. நமக்கு முன்பாக சத்தியம் என்று கூறப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ளும் முன்பாக இந்த மூன்று காரியங்களும் இசைந்து இருக்க வேண்டும்: இயேசு, வேதவசனம், பரிசுத்த ஆவியானவர்.

சத்தியத்தின் இம்மூன்று நிலைகளிலும் பரிசுத்த ஆவியானவரின் பணி **சாட்சி கொடுப்பதாகும்**. "ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்."[38]

நம் அனைவரின் பாவங்களுக்கும் பரிகாரமாக சிலுவையில் பலியாகி இரத்தம் சிந்தின தேவனுடைய குமாரனாகிய பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார். சார்லஸ் வெஸ்லி இவ்வாறு கூறுகிறார்:

> "ஆவியானவர் இரத்தத்திற்குப் பதிலளிக்கிறார், என்னைப் பார்த்து நான் தேவனால் பிறந்தவன் என்று கூறுகிறார்."

பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதினபோது, "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், **பரிசுத்த ஆவியோடும்**, முழு நிச்சயத்தோடும் வந்தது ..."[39] என்பதற்கிணங்க, பரிசுத்த ஆவியானவர் வேதவசனத்திற்கும் சத்தியத்திற்கும் சாட்சி பகருகிறார்.

அனனியாவும் சப்பீராளும்

பரிசுத்த ஆவியானவருக்கும் "பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற"[40] சாத்தானுக்கும் எந்தவிதமான உறவும் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆதித் திருச்சபையில் அனனியாவும் சப்பீராளும் சபைக்குக் கொண்டுவந்த காணிக்கையின் காரியத்தில் அவர்கள் பொய் சொன்னது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் தாங்கள் விற்ற நிலத்தின் முழுத்தொகையையும் கொண்டுவந்ததாகக் கூறினார்கள். ஆனால் உண்மையில் அதன் ஒரு பகுதியைத் தங்களுக்கென்று வைத்துக் கொண்டார்கள்.

இருப்பினும், பேதுருவினிடத்தில் இருந்த சத்தியத்தின் ஆவியானவர் ஏமாறவில்லை. பேதுரு அவர்களைப் பார்த்து, மனிதரிடம் மாத்திரமல்ல சத்தியத்தின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவருக்கும் விரோதமாக பொய் சொன்னீர்கள் என்று கூறுகிறார்:

பேதுரு அவனை நோக்கி: "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்" என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.[41]

மூன்று மணிநேரத்திற்குப் பின் அவன் மனைவி வந்து அவளும் அதே பொய்யைச் சொன்னாள். அவளுடைய புருஷனைப் போலவே அவளும் மரித்துப்போனாள்.

சரியாகச் சொன்னால் அனனியாவும் சப்பீராளும் செய்த பாவம் **மாய்மாலம்** - மார்க்க சம்பந்தமான நடிப்பு. அவர்களின் உண்மையான நிலைக்கு மாறாக அவர்கள் மிகவும் தயாள குணமுள்ளவர்கள் போலவும் கர்த்தருக்குத் தங்களை ஒப்படைத்தவர்கள் போலவும் நடித்தார்கள். இயேசுவானவர் தன் காலத்தில் வாழ்ந்த மதத் தலைவர்களிடத்தில் இருந்த இந்தப் பாவத்தைக் குறித்து மிகவும் கடினமான வார்த்தைகளை உபயோகித்து கண்டித்தார். மத்தேயு 23ஆம் அதிகாரத்தில் 7 முறை "மாய்மாலக்காரரே! உங்களுக்கு ஐயோ. . ." என்று கூறுகிறார்.

மாய்மாலம் என்றால் என்ன?

"மாய்மாலக்காரன்," "மாய்மாலம்" (hypocrite, hypocrisy) என்ற ஆங்கில வார்த்தையானது *ஹிப்போகிரைட்ஸ்* (hupokrites) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். அதற்கான அர்த்தம் "நடிகர்" என்பதாகும். எனவே மாய்மாலம் என்பது "மார்க்க சம்பந்தமான நடிப்பு." மக்களிடத்தில் மாய்மாலத்தைப் போல வேறு எந்தவொரு பாவமும் அதிகமாகப் பரவலாகக் காணப்படுவதில்லை. உண்மையில் சில மதங்களில் இது தேவையானதாகவும் கருதப்படுகிறது.

ஒரு வழிபாட்டு இடத்தில் நுழைந்தவுடன் மக்களுடைய நடைகள் மாறுபடுகின்றன. அவர்கள் சாதாரண நிலையில் வெளிப்படையானவர்களாக இருப்பதில்லை. அவர்களிடத்தில் ஏதோ வெளியில் தெரியாத ஒருவகை உணர்வினால் “இறுக்கமாக” காணப்படுவார்கள். மத உணர்வு என்ற முகமூடியைத் தரித்துக் கொள்ளுவார்கள். ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வகையான முகமூடிகளை அணிந்து கொள்ளத் தூண்டும். ஆனால் சில மதங்கள் மட்டுமே மக்கள் தங்களுடைய உண்மை நிலையில் இருப்பதை அங்கீகரிக்கின்றன.

ஒரு பிரசங்கியார் சில பாவங்களைக் குறித்துக் கண்டித்துப் பேசும்போது அதை ஆமோதிப்பதைப் போல ‘‘ஆமென்!’’ என்று இம்மாதிரியான மக்கள் கூறுவார்கள். ஆனால் ஆலயத்தை விட்டு வெளியில் சென்றவுடன் சிறிதளவு கூட மனசாட்சியில்லாது அதே பாவங்களைச் செய்வார்கள். ஜெபிக்கும்போது மிகவும் சத்தமாகவும் தனியாக அதற்கென ஒரு குரலை உபயோகித்தும் சிறப்பான வார்த்தைகளைப் பயன்படுத்தியும் ஜெபம் செய்வார்கள். உலகப்பிரகாரமாக ஒரு பிள்ளை தன் தகப்பனைக் கவர்வதற்காக செயற்கையான முறையில் வார்த்தைகளை உபயோகித்தும் இயற்கைக்கு மாறான முறையில் நடந்துகொண்டும் இருந்தால் தகப்பனுக்கு எப்படியிருக்குமோ அப்படியே இவர்களின் நடவடிக்கையும் உள்ளது. இவர்கள் இந்தக் குறையை உணர விரும்புவதேயில்லை.

வேதாகமத்தில் தேவன் இப்படிப்பட்ட மாய்மாலக்காரர்களை பொருட்படுத்துவதில்லை. யோபின் சரித்திரத்தில் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. யோபின் மூன்று நண்பர்களும் அதிகமான மார்க்க சம்பந்தமான காரியங்களைப் பேசினார்கள். ‘‘அநியாயக்காரரை சகிக்கமாட்டார்’’ என்றும் “நீதிமான்களையே நேசிக்கிறார்” என்றும் கூறினர். ஆனால் ‘‘தேவன் பொல்லாதவர்களை நியாயந்தீர்க்கிறார், அவர்கள் செழித்து ஓங்குவதில்லை.’’ இருப்பினும், சரித்திரத்தில் இது உண்மையல்ல என்று காணப்படுகிறது. இது வெறும் மார்க்க சம்பந்தமான காரியம் ஆகும்!

மாறாக, யோபு மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறார். ‘‘தேவன் எனக்கு நியாயம் செய்யவில்லை. இவைகள்

எல்லாவற்றையும் பெற நான் செய்தது ஒன்றுமில்லை. ஆனால் ''அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்.”

யோபு 42:7இல் யோபும் அவருடைய நண்பர்களும் எப்படிப்பட்டவர்கள் என்பது குறித்துத் தேவன் கூறுகிறார். “கர்த்தர் தேமானியனான எலிப்பாசை நோக்கி: ‘உன்மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது; என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை.’ ”[42]

அனனியாவும் சப்பீராளும் செய்த பாவத்திலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது? அவர்கள் ஜீவனை விடக் காரணமானது என்ன? என்பது குறித்து நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

சத்தியத்தின் வழி

தாவீது தனது வாழ்வில் இரு பாவங்களைக் குறித்துக் குற்றமுள்ளவராயிருந்தார். முதலாவது தனது பக்கத்து வீட்டுக்காரனாகிய உரியாவின் மனைவியாக இருந்த பத்சேபாளிடத்தில் செய்த விபசாரத்தைக் குறித்ததாகும். இப்பாவத்தை மறைக்க உரியாவைக் கொன்றுபோட்டார்.

தாவீது இதனை ஒரு பெரிய குற்றமாகக் கருதவில்லை. இவற்றின் நடுவிலும் தாவீது தனது அனுதின ஆராதனையை செய்து வந்தார். இராஜா என்ற முறையில் அவனது பணிகளை நிறைவேற்றினார். அரண்மனையில் வசித்தார். தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதினிடத்தில் அவனுடைய பாவத்தைக் குறித்து எடுத்துக் கூறும்வரை வெளிப்படையாக எந்த மாற்றமும் அவரிடம் ஏற்படவில்லை. அந்தச் சமயத்தில் அவருடைய நித்திய வாழ்வு அந்தரத்தில் தொங்கியது. தேவனுடைய பெரிதான கிருபையால் தாவீது சரியான முடிவை எடுத்தார். அவர் எந்தவிதமான சாக்குப்போக்கும் சொல்லவில்லை. பாவத்தை மூட எந்தப் பிரயத்தனமும் செய்யவில்லை. “நான் பாவம் செய்தேன்”[43] என்று ஒப்புக்கொள்ளுகிறார்.

பிற்பாடு சங்கீதம் 51இல், பாவ அறிக்கையும் இரக்கத்திற்கான இறைஞ்சி வேண்டுதலும் செய்கிறார். 5ம்

மற்றும் 6ம் வசனத்தில் “இதோ” என்று ஆரம்பிக்கிறது. இதன் மூலம் உண்மை நிலையைக் கூறுகிறார்.

5ம் வசனம் இவ்வாறு கூறுகிறது, ‘‘இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.’’ சத்திய ஆவியானவர் மாத்திரமே வெளிப்படுத்தக் கூடிய காரியத்தைத் தாவீது முகமுகமாய் காண்கிறார்: தான் செய்த பாவச் செயலை மாத்திரமல்ல, ஆதாமின் சந்ததியாரிடத்தில் குடிகொண்டிருக்கும் கொடூரமான பாவத்தின் வல்லமையையும் அவர் அறிந்து கொண்டார்.

6ம் வசனம் நம்மில் குடிகொண்டிருக்கும் வல்லமையிலிருந்து தேவன் எதனடிப்படையில் நம்மை விடுவிக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது: ‘‘இதோ, **உள்ளத்தில் உண்மையிருக்க** விரும்புகிறீர்.” தாவீது பாவம் செய்தபின்பும் இராஜாவுக்கடுத்த வெளிப்படையான அனைத்துக் கடமைகளையும் செய்து வந்தார். ஆனால் இப்போது அவரது வெளிப்படையான செயல்பாட்டுக்கும் இருதயத்தின் உள்ளான நிலைக்கும் நிறைய வேறுபாடு காணப்படுகிறது. தன்னுடைய இருதயத்தின் நிலைக்கு ஏற்ப நடந்துகொள்ளாத ஒரு நடிகனாக ஒரு மாய்மாலக்காரனாக மாறினார். இதற்கு ஒரே ஒரு தீர்வு: நேர்மையான அறிக்கையிடுதலும் மனப்பூர்வமான பாவ அறிக்கையுமாகும்.

குருத்தோலை ஞாயிறு முதல் பெரிய வெள்ளி வரை

வேதாகமம் முழுவதும் காணப்படுகிறதான ஒரு சத்தியம்: **தேவன் ஒருபோதும் பாவத்தோடு ஒத்துப் போகிறவரல்ல.** இந்தச் சத்தியத்தை இயேசுவின் வாழ்க்கையில் இரண்டு சிறப்பு நாட்களில் தெளிவாகக் காணலாம்: குருத்தோலை ஞாயிறு மற்றும் பெரிய வெள்ளி வரை.

குருத்தோலை ஞாயிறு அன்று “கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாக’’[44] இயேசு எருசலேமுக்குள் பவனியாக வருகிறார். அந்த நகரம் முழுவதும் அவருக்காகக் காத்திருந்தது. அவர் மிகவும் எளிதாக தனது எதிரிகளான மதத் தலைவர்களை ஓரம் கட்டித் தன்னை

இராஜாவாக நிலைநிறுத்தியிருக்கலாம். அதைத்தான் மக்களும் எதிர்பார்த்தனர்.

இருப்பினும், அவர் வேறு ஒரு வழியைத் தெரிந்து கொண்டார். ஐந்து நாட்களுக்குப் பிறகு கொடூரமான சிலுவையில் எல்லாராலும் கைவிடப்பட்டவராகத் தொங்கினார். ஏன்? ஏனெனில் தேவன் ஒருபோதும் பாவத்தோடு ஒத்துப்போகமாட்டார். எனவே பாவத்திற்குப் பரிகாரமாக இயேசு தன்னை சிலுவையில் தியாக பலியாக ஒப்புக் கொடுத்தாக வேண்டுமென்ற ஒரே வழியைத் தவிர வேறு வழியில்லை.

அநேக கிறிஸ்தவர்கள் இன்று ''உயிர் மீட்சியைக்'' குறித்து ஜெபிக்கவும் பேசவும் செய்கிறார்கள். உயிர்மீட்சிக்குத் தடையாக உள்ள ஒரு காரியம் பாவம் என்பதையும் அதை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என்பதையும் அவர்கள் நினைப்பதில்லை. பாவத்தின்மீது சரியான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளும் வரை உண்மையான உயிர்மீட்சி ஏற்படாது. பாவத்தைக் கையாளும் ஒரே வழி: ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.''[45]

வெளிப்படையாகக் கூறினால், இன்றைய திருச்சபைகளில் ''மூடிமறைக்கப்பட்ட பாவம்'' நிறைந்து காணப்படுகிறது. கிறிஸ்தவர்கள் மூடி மறைக்கிற சில பாவங்களைக் கீழே காணலாம்:

1. குழந்தைகளுக்கு இழைக்கப்படும் தீமைகள்: சரீரப்பிரகாரமாக, உணர்வுப்பூர்வமாக, பாலியல் ரீதியாக அல்லது இவைகளனைத்தும் ஒன்றுசேர்ந்தவைகளாக இழைக்கப்படும் கொடுமைகள்.

2. திருமண முறிவுகள்.

3. பணத்தைச் சரியான முறையில் கையாளாமை.

4. ஆபாசமான காரியங்களுக்கு அடிமையாயிருத்தல். (சபைத் தலைவர்களிடத்தில் இது சர்வசாதாரணமாகக் காணப்படுவதைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன்.)

5. பெருந்தீனி - சரீரப் பசியைப் போக்க அதிகக் கவனம் செலுத்துதல்.

தேவன் இதற்கு வைத்திருக்கும் தீர்வு இரண்டு நிலையிலுள்ளது: முதலாவது, **அறிக்கையிடுதல்**; பிறகு **விட்டுவிடுதல்**. பாவத்தை அறிக்கையிடுவது எளிதல்ல. இருப்பினும், வேறு வழியில்லை. "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.''[46] நாம் அறிக்கையிட விரும்பாத பாவங்களை மன்னிக்க, அவர் வாக்களிக்கவில்லை.

ஆனால் பாவ அறிக்கை செய்தால் மட்டும் போதாது. நாம் செய்த பாவங்களை ''விட்டுவிட'' வேண்டும். நாம் அறிக்கை செய்த பாவங்களை மீண்டும் செய்யக் கூடாது என்ற திடமான ஒரு தீர்மானம் செய்ய வேண்டும். தானியேல் இராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குச் சொன்ன புத்திமதிகளை நாமும் பின்பற்ற வேண்டும்: ''நீதியைச் செய்து உமது பாவங்களையும், ... அகற்றிவிடும்."[47] நீதிக்கும் பாவத்துக்கும் நடுவில் எதுவும் இருக்கமுடியாது. ''அநீதியெல்லாம் பாவந்தான்.''[48] எதுவெல்லாம் நீதியில்லையோ அவையனைத்தும் பாவமாகும்.

நீங்கள் ஒரு கடினமான தீர்மானம் எடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றீர்களா?

இந்த அத்தியாயத்தை வாசிக்கும்போது நீங்கள் ஒத்துக்கொள்ளும் நிலையில் உங்கள் வாழ்வில் சில காரியங்கள் இருக்குமானால் அல்லது சில விஷயங்களில் கீழ்ப்படியாமை உள்ளது என நீங்கள் உணர்ந்தால் சத்திய ஆவியானவருக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள்! அவர் உங்களுக்கு உதவி செய்ய ஆவலாகவும் ஆயத்தமாகவும் உள்ளார்.

5

ஆவியின் வரங்கள்

ஆபிரகாம் தன் வேலைக்காரனை கானானிலிருந்து பதான் அராமுக்குத் தன் மகனுக்கு ஏற்ற பெண்ணைப் பார்க்க அனுப்பியபோது அந்த வேலைக்காரன் பத்து ஒட்டகங்கள் மேல் உச்சிதமான பொருட்களை ஏற்றித் தன்னோடு கொண்டு சென்றான். நான் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தபோது ஒரு ஒட்டகத்தின்மேல் எவ்வளவு சாமான்களை ஏற்றமுடியும் என்பதை என் கண்களால் பார்த்திருக்கிறேன். அது மிகவும் ஆச்சரியமானது!

பத்து ஒட்டகங்கள் மேல் சாமான்களை ஏற்றிச் சென்றார் என்றால் ஆபிரகாம் எவ்வளவு பெரிய கனவான் மற்றும் எவ்வளவு பெரிய செல்வந்தன் என்பதை நாம் யூகிக்கலாம். அப்பொருட்களில் மிகவும் விலையேறப்பெற்ற பரிசுப் பொருட்களும் தங்க நகைகளும் அடங்கும். ஈசாக்குக்கு நியமிக்கப்போகிற அந்த இளம்பெண்ணை அந்த வேலைக்காரன் கண்டபோது அவன் செய்த முதல் காரியம், அந்தப் பெண்ணுக்கு விலையேறப்பெற்ற மூக்குத்தியை அணிவித்தான்.

அந்தப் பரிசினை ரெபேக்காள் ஏற்றுக் கொண்டதன்மூலம் அவள் தன்னை ஈசாக்குக்கு மணப்பெண்ணாக தன்னை அர்ப்பணம் செய்தாள். ஒருவேளை அவள் அந்தப் பரிசினை வாங்க மறுத்திருந்தால் அவள் ஈசாக்கை நிராகரித்து அவரைக் கனவீனப்படுத்தியிருந்திருப்பாள். அவள் அவருடைய மணப்பெண்ணாக இருந்திருக்க முடியாது.

இந்த நாளிலும் அதேபோல தேவனும் தன் குமாரனாகிய இயேசுவுக்கு ஏற்ற மணப்பெண் என்னும் சபைக்கு அளவிடமுடியாத ஆசீர்வாதங்களோடு தனது பரிசுத்த ஆவியானவரை அனுப்பியுள்ளார். அந்த

ஆசீர்வாதங்களில் ஒன்பது ஆவிக்குரிய வரங்களும் அடங்கும். இந்த வரங்களை ஏற்றுக்கொண்டதின் மூலம் கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்படைக்கும் மணப்பெண்ணாக சபையைத் தேவன் தெரிந்து கொள்கிறார்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்பது வரங்கள்

1 கொரிந்தியர் 12:8-10இல் ஒன்பது ஆவிக்குரிய வரங்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அதன் சரியான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும்படி கீழ்க்கண்டவாறு அதனைக் குறிப்பிடுகிறேன்:

1. ஞானத்தின் வசனம்

2. அறிவின் வசனம்

3. விசுவாசம்

4. குணமாக்கும் வரங்கள்

5. அற்புதங்கள் செய்தல் (வல்லமை)

6. தீர்க்கதரிசனம்

7. ஆவிகளைப் பகுத்தறிதல்

8. பல்வேறு பாஷைகள்

9. பாஷைகளை வியாக்கியானம் செய்தல்

இந்த வரங்கள் யாவும் ''வெளிப்படையானவை.'' பரிசுத்த ஆவியானவர் காணக்கூடாதவர். ஆனால் இந்த வரங்களின் மூலமாக அவர் தன்னை வெளிப்படுத்துகிறார். நாம் காண்பதன் மூலமாக கேட்பதன் மூலமாக அல்லது உணர்வதன் மூலமாக அவர் நம்மோடு இடைப்படுகிறார்.

இவையெல்லாம் ''நம்முடைய நன்மைக்காகவே.'' இதன்மூலம் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளமுடியும். சில நடைமுறை நோக்கங்களுக்காகவே இவைகள் நடைபெறுகின்றன. இவைகள் கருவிகள்தான், விளையாட்டுப் பொருட்களல்ல.

இந்த வரங்கள் யாவும் இயற்கைக்கு மேற்பட்டவை. ஏதோ சிறப்புக் கல்வியின் மூலமாகவோ இயற்கையாகவோ உண்டான திறமையினாலோ கிடைப்பதல்ல. படிப்பறிவில்லாத ஒரு மனிதன் கூட ஞானத்தின் வசனத்தையோ அறிவின் வசனத்தையோ பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல நமது இரட்சிப்புக்குத் தேவையான விசுவாசத்திற்கும் மேலான "விசுவாச" வரத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். இயற்கையாக வளரக்கூடிய விசுவாச வரம் மற்ற விசுவாசத்தினின்று மாறுபட்டது. இந்த விசுவாச வரம் இயற்கைக்கு மேலானது. நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டது. இது இயற்கைக்கு மேலான பலன்களைக் கொண்டுவரும்.

அடிக்கடி பேசப்படும் ஒரு காரியம் என்னவென்றால்: அப்போஸ்தலருடைய இறுதிக் காலத்தில் இந்த வரங்கள் யாவும் எடுக்கப்பட்டுவிட்டன என்றும் தற்போது இவைகள் வழக்கத்தில் இல்லை என்பதாகும். ஆனால் பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்காக ஆண்டவரைத் துதித்தார், ஏனெனில், ''நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.''[49] எனவே கிறிஸ்து திரும்ப வரும்வரை கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் இரண்டு வரங்களாகிய ஞானத்தின் வசனமும் அறிவின் வசனமும் நடைமுறைக்கு ஏற்றதாக உள்ளது. அறிவின் வரம் என்பது சூழ்நிலையை உணர்ந்து கொள்ள உதவுகிறது. ஞானத்தின் வரத்தின்மூலம் அந்தச் சூழ்நிலையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதைத் தேவன் நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

சில வரங்கள் பன்மையில் செயல்படுகின்றன: உதாரணமாக, குணமாக்கும் வரங்கள்; அற்புதங்களைச் செய்யும் வரங்கள்; ஆவிகளைப் பகுத்தறியும் வரங்கள்; பல்வேறு பாஷைகளைப் பேசும் வரங்கள். இதன்மூலம் ஒவ்வொரு சுகமாக்குதலும், ஒவ்வொரு அற்புதமும், ஒவ்வொரு பகுத்தறிதலும், ஒவ்வொரு பாஷை பேசுதலும் ஒரு வரமாகும். ஒரு வரமானது ஒருவரின் மூலம் செயல்படும்போது அவருக்கு அந்த வரம் உண்டு என்று நாம் கூறலாம்.

சம்பாதிக்க முடியாத வரங்கள்

இந்த வரங்கள் யாவும் தேவனுடைய கிருபையினால் கிடைப்பவை என்பதை உறுதியாக கூற விரும்புகிறேன். இவைகள் விசுவாசத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்றன. இவைகளை நாம் சம்பாதிக்க முடியாது. நாம் "நல்லவர்களாக" இருப்பதன் மூலம் இவைகளைப் பெற்று பயன்படுத்த முடியாது.

1914ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இராணுவத்தின் ஒரு பாசறையில், ஒருநாள் இரவு ஒரு வல்லமையான, வாழ்க்கையை மாற்றக்கூடிய அனுபவமாகிய இயேசு கிறிஸ்துவை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதே பாசறையில் ஒரு வாரத்திற்குப் பின்பு முதல் முறையாக நான் அறியாத மொழியில் பேசினேன். பிறகு நான் எதிர்பாராதவிதமாக, நான் பேசிய, அறியாத மொழிக்கான "விளக்கத்தை" அழகான ஆங்கிலத்தில் கவிதை நடையில் நானே பேச ஆரம்பித்தேன். இது என் வாழ்க்கையிலும் எனது ஊழியத்திலும் தேவனுடைய திட்டத்திற்கான ஆதாரமாக அமைந்து ஒவ்வொரு நிலையிலும் இன்றுவரை நிறைவேறி வருகிறது (55 ஆண்டுகளுக்கும் மேலாக).

இரட்சிக்கப்பட ஆலயத்திற்குச் செல்ல வேண்டுமென்பது குறித்தோ, பற்பல பாஷைகளில் பேசின பின்பு ஆறுமாத காலம் காத்திருந்து அதனை வியாக்கியானம் செய்வதற்கான வரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது குறித்தோ தெரிந்துகொள்ளும் அளவிற்கு நான் "ஆவிக்குரியவனாக இருக்கவில்லை!"

1957 முதல் 1961 வரை நான் கென்யா தேசத்திலுள்ள ஆப்பிரிக்க ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றினேன். அச்சமயத்தில் எங்கள் கல்லூரியில் ஒருமுறை பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலை நாங்கள் உணர்ந்தோம். மாணவர்களோடு நடந்த கூட்டங்களில் ஒன்பதுவிதமான வரங்களும் செயல்பட்டதைப் பலமுறை நான் கண்டிருக்கிறேன். எங்கள் மாணவர்களில் இருவர் இருவேறு நிகழ்வுகளில் மரணத்திலிருந்து உயிர்பெற்றனர். தங்கள் உடலிலிருந்து ஆவி பிரிந்தபின் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இருவரும் சாட்சி பகர்ந்தனர்.

அதற்குப் பிறகு அமெரிக்காவில் கால்களை இழந்த மக்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கு நான் எதிர்பாராத ஒரு “வரத்தினைப்” பெற்றுக் கொண்டேன். அவர்கள் எனக்கு முன்னால் அமர்ந்து அவர்களின் கால்களை நான் பிடித்திருக்கும்போது குறைந்த அளவுள்ள கால்கள் என் கண்களுக்கு முன்பாகவே வளர்ந்துவருவதை நான் கண்கூடாகவே பார்த்தேன். ஒரு வேதபண்டிதருக்கு ஏற்ற ஊழியம் இதுவல்ல என்று ஒருசிலர் கூறினர். நான் ஆண்டவரிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர் எனக்குக் கொடுத்த பதில்: “நான் உனக்கு ஒரு வரத்தை அளித்துள்ளேன். இதன்மூலம் நீ இரண்டு காரியங்களைச் செய்யலாம். இதனை நீ பயன்படுத்திப் பெருக்கிக் கொள்ளலாம். அல்லது அதனைப் பயன்படுத்தாமல் இழந்துவிடலாம்.” அதன்பிறகு தேவன் எனக்குக் கொடுத்ததைப் பயன்படுத்த ஆரம்பிக்க முடிவுசெய்தேன். அதன்பிறகு இன்னும் அதிகமாகப் பெற்றுக்கொண்டேன்.

ஒருமுறை குறைந்த அளவுள்ள ஒரு கால், 2 அங்குலம் வளர்ந்தது. தேவனுடைய இயற்கைக்கு மேலான வல்லமை வேறு அற்புதங்களையும் நடப்பித்தது. ஒருமுறை சிறப்பான ஜெபம் செய்யாமலேயே ஒருவர் மூன்று விதமான சரீர குறைபாட்டிலிருந்தும் போதைப் பழக்கத்திலிருந்தும் விடுபட்டார்.

ஒருமுறை ஒரு பெண் ஒரு காகிதப் பையுடன் வந்தாள். அதில் ஒரு காலணியில் ஒன்றரை அங்குலம் உயரமாக வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணின் குறைந்த அளவுடைய காலை என் கையில் பிடித்திருந்தபோது அந்த கால் ஒன்றரை அங்குலம் வளர்ந்தது. அதன்பின்பு அந்தப் பெண் தன் பையைத் திறந்து சரியான அளவுடைய இரு காலணிகளை எடுத்து அணிந்தாள். அவைகள் அவளுடைய கால்களுக்கு சரியாக இருந்தது.

இந்த வகையான ஆவிக்குரிய வரத்திற்கு வேத வாக்கியங்களின் அடிப்படையில் “அற்புதங்களைச் செய்யும் வரம்” என்று நான் பெயரிட்டேன்.

இதே சமயத்தில் இதே வரத்தினை, வேறு வகையில் பயன்படுத்த தேவன் என்னை வழிநடத்தினார். பொதுக் கூட்டங்களில் பிசாசுகளைத் துரத்த தேவன் என்னைப்

பயன்படுத்த ஆரம்பித்தார். மீண்டும் இப்படிப்பட்ட ஊழியத்தில் ஏற்படும் பிரச்சினைகளான பிசாசுகளின் சத்தமிடுதலுக்கும் ஒழுங்கீனமான காரியங்களுக்கும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் இயேசுவின் ஊழியத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நிகழ்ந்ததாக சுவிசேஷங்களில் நான் வாசித்து அறிந்தேன். எனவே இவ்வூழியத்தினைத் தொடர்ந்து செய்தேன். இதன்பின்பு பல வருடங்களாக இந்த ஊழியத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோர் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதை நான் கண்டேன்.

ஆவிக்குரிய வரங்களைத் தடையின்றி உபயோகப்படுத்த நாம் விரும்பினால் "ஆலயங்களில்" நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று, தொன்றுதொட்டு நடந்துவரும் பாரம்பரிய நடைமுறைகளினின்று நாம் நம்மை விடுவித்துக் கொள்ளவேண்டும்.

ஆவிக்குரிய வரங்களை நாம் பயன்படுத்த மற்றுமொரு நிபந்தனை என்னவென்றால் பரிசுத்தஆவியானவரோடு நெருக்கமான உறவும் அவர் எப்பொழுதெல்லாம் கிரியை செய்ய விரும்புகிறாரோ அப்பொழுதெல்லாம் நாம் செயல்படவும் அவருக்கு நாம் இடமளிக்க வேண்டும். ஒருமுறை நானும் ரூத்தும் ஒரு கிறிஸ்தவ தம்பதியரோடு மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது அந்தப் பெண் தனது உடலில் சில அமினோ அமிலங்களைப் பயன்படுத்தக் கூடாத நிலையில் சில குறைபாடுகள் இருப்பதை மருத்துவப் பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டதாகவும் இதனால் இவரது மூளை சிறிது சிறிதாக கெட்டுக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

அந்தப் பெண்ணின் கணவன் சில வேலைகளினிமித்தம் வெளியே சென்றுவிட்டார். நாங்கள் இருவரும் அந்தப் பெண்ணுடன் அவர்கள் வீட்டிற்கு வந்தோம். கார் நிறுத்துமிடத்தில் நாங்கள் விடைபெற்றுக் கொண்டு, ஒருசில நிமிடங்கள் நின்றோம். பரிசுத்தஆவியானவரின் உந்துதலால் ரூத் அந்தப் பெண்ணைப் பார்த்து, "நான் உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன்." என்று கூறினாள். பிறகு நாங்கள் எங்கள் இருப்பிடத்திற்கு வந்துவிட்டோம்.

மூன்று வாரங்களுக்குப் பின்பு அந்தப் பெண்ணின் கணவன் எங்களிடம் தனது மனைவி முழுவதுமாக

குணமடைந்துவிட்டதாகக் கூறினார். அந்தப் பெண்ணைப் பரிசோதித்து, நோயைக் கண்டறிந்து தெரிவித்த அதே மருத்துவமனையில், அவர் முற்றிலும் குணமானது பின்னர் உறுதி செய்யப்பட்டது.

தேவன் சுகமளிப்பதற்கென்று ஓர் இடத்தையும் ஒரு காலத்தையும் குறித்திருக்கிறார். ஏனெனில் ரூத் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலுக்குக் கீழ்ப்படிந்ததால் சுகம் கிடைத்தது. தேவனும் மகிமைப்பட்டார்.

ஆவிக்குரிய வரங்களின் வரம்புகள்

ஆவிக்குரிய வரங்கள் வெளிப்பட்ட சிலவிதங்களை நான் திரும்பிப் பார்க்கும்போது பரவசமடைகிறேன். ஆனால் அதேசமயம் ஆவிக்குரிய வரங்களிலிருந்து நாம் எதிர்பார்க்கும் காரியங்களுக்கும் சில திட்டவட்டமான எல்லைகளுண்டு.

முதலாவதாக, ஆவிக்குரிய வரங்கள் யாவும் தற்கால வாழ்வுக்கு ஏற்றதாக வரையறுக்கப்பட்டுள்ளது. தீர்க்கதரிசன வரங்கள், அந்நிய பாஷைகள், அறிவின் வார்த்தை ஆகியவைகள் குறித்து பவுல் பேசுகையில்: ''தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஒழிந்துபோம்; அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.”[50]

நாம் இன்னும் “ஒழுங்கற்ற” காலத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் இந்த வாழ்விலிருந்து நித்தியத்திற்குள் பிரவேசிக்கும்போது நாம் உயிர்த்தெழுதலின் சரீரத்தைப் பெற்றுக் கொள்கிறோம். எனவே நமக்கு அந்நிய பாஷைகள் அல்லது தீர்க்கதரிசனம் அல்லது அறிவின் வார்த்தைகள் மூலமாக நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் அப்போது நமக்குத் தேவைப்படாது. இக்கூற்று மற்ற வரங்களாகிய குணமாக்குதல் மற்றும் அற்புதங்கள் நடப்பித்தல் ஆகியவற்றிற்கும் பொருந்தும். நமது உயிர்த்தெழுந்த சரீரங்களுக்கு இனி இவைகள் தேவைப்படாது!

ஆவிக்குரிய வரங்கள்மீது மிகவும் கரிசனை உள்ளவர்களாக மக்கள் காணப்படுவார்களானால் அவர்கள்

நித்தியத்தைவிட இக்காலத்தின் காரியங்களிலேயே கருத்துள்ளவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட மக்கள் பவுல் கூறும் எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: ‘‘இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.”[51]

மிகவும் முக்கியமான காரியம் என்னவென்றால், ஆவிக்குரிய வரங்களைப் பிரயோகிக்கும்போது அவைகள் உபயோகப்படுத்துபவரின் குணாதிசயங்களை வெளிப்படுத்துவதில்லை. இதனை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்க விரும்புகிறேன். சோம்பேறியும், தந்திரமும், திமிர்பிடித்தவனுமான ஒரு மனிதனுக்கு, அவன் சம்பாதிக்காமலேயே பத்து இலட்சம் டாலர் பணம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவனது குணாதிசயம் மாறப்போவதில்லை. அவன் இப்போதும் சோம்பேறியாகவும், தந்திரமானவனாகவும், திமிர்பிடித்தவனாகவும் இருப்பான். இன்னும் சொல்லப்போனால், பத்துலட்சம் டாலர் தன் வங்கிக் கணக்கில் இருப்பதால் முன்பைவிட இப்போது அதிகத் திமிர்பிடித்தவனாகவே இருப்பான்.

இதேபோன்று ஆவிக்குரிய வரங்களாகிய தீர்க்கதரிசனம் சொல்லுதல், குணமாக்குதல், அற்புதங்கள் செய்தல் ஆகிய வரங்களைப் பெற்ற ஒரு மனிதனின் விஷயத்திலும் இது பொருந்தும். வரங்களைப் பெறும் முன்பு பெலவீனனாகவும் நிலையற்றவனாகவும் இருந்திருப்பான் என்றால், அதன்பிறகும் அவ்வாறே இருப்பான். ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட அந்தப் புதிய வரத்தின் மூலமாக மனிதரிடையே அவனுக்கு மிகப்பெரிய செல்வாக்கு ஏற்படும். அதே சமயத்தில் அம்மனிதனுக்கு, தேவனுக்குப் பிரியமாகவும் நீதியான முறையிலும் அந்த வரத்தினைப் பயன்படுத்தக் கூடிய பொறுப்பு ஏற்படுகிறது.

ஆனால் கிறிஸ்தவ சமுதாயத்தில் மிகப் பெரிய பிரச்சனை என்னவென்றால், மக்கள் ஒரு ஊழியக்காரனை அவனுக்குள்ள வரங்களை வைத்தே மதிப்பிடுகின்றனரே தவிர, அவனுடைய நடத்தையை வைத்தல்ல. இருப்பினும், நடைமுறையில் நாம் காணும்போது மிகவும் மோசமான நடத்தையை உடைய ஒரு மனிதனும்கூட கவர்ச்சிகரமான

மற்றும் சிறப்பான வரங்களைப் பயன்படுத்த முடியும். இப்படிப்பட்டவர்கள் சில சமயங்களில் தங்கள் நடத்தையிலுள்ள குறைபாடுகளை மறைக்கத் தங்களுக்கு அளிக்கப்பட்ட வரங்களைப் பயன்படுத்துகின்றனர்.

ஸ்காண்டிநேவியா தேசத்தில் ஓர் ஊழியக்காரர் இருந்தார். அவர் பரிசுத்த ஆவியானவரின் “பின்மாரியைக்” குறித்துத் தன் சபையாருக்கு மிகவும் வல்லமையாகப் போதித்தார். அதனால் மழைத்துளி தங்கள்மேல் விழுவதுபோல பரிசுத்த ஆவியானவர் இறங்குவதை உணர்ந்தனர். ஆனால் அவரோ ஆலய ஆராதனை முடிந்த பின்னர், நேரடியாக விபச்சாரம் செய்யப்போவார். அவர்மீது இக்குற்றத்தினைச் சுட்டிக் காட்டியபோது அவரே அதை ஒத்துக்கொள்ளும் வரை இவ்வளவு வல்லமையாகப் பிரசங்கம் செய்பவர் இப்படிப்பட்ட பாவத்தைச் செய்வாரா என மக்கள் நம்பவில்லை.

தன் ஊழியத்தில் அற்புதங்கள் செய்த ஒரு வயதான ஊழியர்மேல், ஓர் இளம் போதகர் என்ற முறையில் நான் அதிகம் மரியாதை வைத்திருந்தேன். அவர், ஒரு கிறிஸ்தவர் பாவம் செய்யாமல் வாழ முடியும் என மிகவும் ஆணித்தரமாக போதித்து வந்தார். இருப்பினும், அவர் தனது மனைவியை விவாகரத்து செய்துவிட்டு தன் பெண் செயலாளரை மணம் செய்துகொண்டு, ஒரு குடிகாரனாக மரித்தார். இதேபோன்று பிரபலமாக, வெற்றிகரமாக விளங்கிய போதகர்கள்கூட இதேபோன்ற வேதனையான முடிவினைச் சந்தித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கண்ணுறும் மக்கள், “தவறான முறையில் வரங்களைப் பயன்படுத்தினால், தேவன் அந்த வரங்களை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வார்” என்று கூறுகிறார்கள்!

ஆனாலும் அதற்கான பதில் இல்லை என்பதே! ஆவிக்குரிய வரங்கள் என்பது அதன் பெயரைப் போன்றது. அவைகள் உண்மையான வரங்கள். அதில் எந்தவிதமான நிபந்தனையும் இல்லை. அல்லது திருப்பிச் செலுத்த வேண்டிய காரியம் எதுவும் இல்லை. “தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே.”[52]

நாம் ஒருமுறை இந்த வரங்களைப் பெற்றுக் கொள்வோமென்றால் நாம் அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது தவறான முறையில் பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்தாமலேயும் இருக்கலாம். முடிவில் தேவன் நாம் செய்ததற்கும் செய்யாததற்கும் கணக்குக் கேட்பார்.

இயேசு சொன்னதை நாம் மனதில் கொள்ள வேண்டும், "**அவர்களுடைய கனிகளி**னாலே அவர்களை அறிவீர்கள்"[53] - வரங்களினால் அல்ல.

ஆவிக்குரிய வரங்களை உபயேகிப்பது, பரலோகத்திற்குச் செல்வதற்கான வழி என்று எண்ணக்கூடாது என இயேசு கீழ்க்கண்டவாறு எச்சரிக்கிறார்.

> *"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: 'கர்த்தாவே! கர்த்தாவே!' உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, 'நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்' என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."*[54]

இதன்மூலம் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தும் ஒருவர் அதேசமயம் "சட்ட விரோதமான" காரியங்களிலும் ஈடுபடலாம் என்பது தெளிவாகிறது. "சட்ட விரோதமான" காரியம் என்றால் என்ன? தேவனுடைய இயற்கைக்கு மேலான வல்லமையின் மூலம் கிடைக்கும் ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்துபவர்கள், அவர் எதிர்பார்க்கும் நீதி நியாயங்களைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு முரட்டாட்டமான எண்ணமேயாகும்.

இப்படிப்பட்ட ஊழியங்கள், சில சமயங்களில் நம்முடைய வாழ்வில் தனிப்பட்ட தீர்மானங்கள் செய்வதற்கு

முடியாத சூழ்நிலையில் நம்மைக் கொண்டு சென்றுவிடும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலாவதாக, பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த எச்சரிப்பை மனதில் கொள்ள வேண்டும்: "... மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்."[55]

இரண்டாவதாக, இப்படிப்பட்ட ஊழியங்களைக் குறித்து இயேசுதாமே கொடுத்த எச்சரிப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும்: ''என்னுடைய பரம பிதாவின் சித்தத்தின்படி செய்பவனே பரலோகத்தில் பிரவேசிப்பான்." நாம் ஒவ்வொருவரும் நாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வி: எனது வாழ்வில் தேவனுடைய சித்தம் என்ன? எனது பரம பிதா என்னிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்?

என்னைப் பொறுத்தவரை, தேவன் எனக்குத் தெளிவான பதிலைக் கொடுத்திருக்கிறார் என நினைக்கிறேன்: ''நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.''[56] இதற்குப் பரிசுத்த ஆவியானவர் ஒரு எச்சரிப்பையும் தருகிறார்: ''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.''[57] ''பரிசுத்தத்தை நாடுவதே'' எனது தீர்மானமாக இருக்கிறது.

அடுத்த அத்தியாயத்தில் நாணயத்தின் மறுபக்கமாகிய "ஆவியின் கனியைக்" குறித்து கூறவுள்ளேன்.

6

ஆவியின் கனி

இதற்கு முன்பான அத்தியாயம் ஆவியின் **வரங்களை** மையமாகக் கொண்டிருந்தது. இந்த அத்தியாயத்தின் மையக்கருத்து ஆவியின் **கனியாகும்**.

கனிக்கும் வரங்களுக்கும் வித்தியாசம் உண்டு. இதனை ஓர் ஆப்பிள் மரத்தையும் கிறிஸ்மஸ் மரத்தையும் ஒப்பிடுவதன் மூலம் விளக்கலாம்.

ஒரு கிறிஸ்மஸ் மரம் பரிசுகளைத் தாங்கிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரிசும் ஒரு சமயத்தில் கட்டப்படுவதும், மற்றொரு சமயத்தில் அதனின்று எடுத்து ஒருவருக்கு கொடுக்கப்படுவதும் உண்டு. பரிசினைப் பெறுவதற்கு காலமோ அல்லது எந்தவித சிரமமோ அடையத் தேவையில்லை.

ஆனால் அதேசமயம், ஒரு ஆப்பிள் மரத்தை வளர்க்கக் காலமும் கடின உழைப்பும் தேவைப்படுகிறது. அந்த மரம் கனி கொடுக்க பல நிலைகளைக் கடந்து, பல வருடங்கள் செல்ல வேண்டும்.

முதலாவது, நிலத்தில் விதை ஊன்றப்படவேண்டும். விதையிலிருந்து ஒரு பகுதி நிலத்திற்குள் வேராகவும் ஒரு பகுதி நிலத்திற்கு வெளியே தண்டுப்பகுதியாகவும் வெளியே வளர்ந்து வருகிறது. பல வருடங்களுக்குப் பின்பு, தண்டுப்பகுதி மரமாக மாறுகிறது. பிறகு மரத்தில் பூக்கள் பூத்து, அவைகள் விழுந்து, பழங்கள் உண்டாகின்றன.

மரம் நன்கு பலம் பெற வேண்டுமானால், பூக்கள் அல்லது சிறிய காய்களை முதல் வருடத்தில் கொய்துவிட வேண்டும். அப்போது வேர்கள் நன்றாக வலுப்பெற்று, அந்த

மரத்தைத் தாங்கி நிற்கும். ஆப்பிள் பழங்கள் சாப்பிட ஏற்றதாக இருக்க வேண்டுமானால் பல வருடங்கள் செல்லும். (மோசேயின் சட்டப்படி நான்கு வருடங்கள் செல்லும்.[58])

மரம் வளர்ந்து வரும் பல நிலைகளிலும் ஆப்பிள் மரமானது ஒடியக்கூடிய தன்மையுள்ளது. அதி வேகமாக காற்று வீசும்போது இளம் மரம் வேரோடு சாய்ந்துவிடும். அல்லது பிற்காலத்தில் பனியானது பூக்களையோ பழங்களையோ அழித்துவிடும்.

இந்த முறையில் விதையும் பழமும் பிரிக்கமுடியாத வகையில் ஒன்றோடொன்று இணைந்திருக்கிறது. ஒரு விதையிலிருந்து பழம் உண்டாகிறது. ஆனால் அதேசமயம் பல விதைகளை உண்டாக்கப் பழங்கள் தேவைப்படுகிறது. சிருஷ்டிப்பின் சமயத்தில் தேவன், ‘‘தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்கள் உண்டாகக்கடவது”[59] என்றார்.

இது ஒரு ஆவிக்குரிய காரியத்தை நமக்குத் தெரிவிக்கிறது: கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஆவிக்குரிய கனியைத் தராவிட்டால் மற்றவர்கள் வாழ்க்கையில் விதைப்பதற்கு அவர்களுக்கு விதை கிடையாது.

புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய **வரங்களைப்** பன்மையில் நமக்குத் தெரிவிக்கிறது. ஒன்பது வகையான வரங்களைக் குறித்து 1கொரிந்தியர் 12:8-10இல் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதேசமயம், புதிய ஏற்பாடு ஆவிக்குரிய **கனியைக்** குறித்து ஒருமையில் கூறுகிறது. ஒன்பது வகையான ஆவிக்குரிய கனியைக் குறித்து கலாத்தியர் 5:22,23இல் விவரம் கூறப்பட்டுள்ளது: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.

கனியில் பிரதானமான **“அன்பு”** இந்தப் பட்டியலில் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது. மற்ற கனியும் அன்பினை வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றன.

சந்தோஷம் - அன்பின் குதூகலம்

சமாதானம் - அன்பின் அடைக்கலம்

நீடியபொறுமை - அன்போடு பொறுமை காத்தல்

தயவு - அன்பினால் ஊழியம் செய்தல்

நற்குணம் - அன்பினால் மற்றவர்களுக்கு நன்மை செய்தல்

விசுவாசம் - அன்பின் வாக்குகளை நிறைவேற்றுதல்

சாந்தம் - பாதிக்கப்பட்ட உள்ளங்களுக்கு அன்பினால் ஆறுதல் அளித்தல்

இச்சையடக்கம் - அன்பு தனது கட்டுப்பாட்டுக்குள் இருத்தல்

இயேசு யாருடைய உள்ளங்களில் வசிக்கிறாரோ அவர்கள்மூலமாய் இயேசுவின் குணாதிசயம் வெளிப்படுவதே ஆவியின் கனி என்று நாம் வேறுவிதமாக அதனை விவரிக்கலாம்.

ஆவிக்குரிய முன்னேற்றத்தின் ஏழு நிலைகள்

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு முழு கிறிஸ்தவனுடைய ஏழு வகையான நிலைகள் குறித்து 2 பேதுரு 1:5-7 இல் உள்ள பகுதியில் அப்போஸ்தலன் விளக்குகிறார்:

இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

இந்த நிலையை வெற்றிகரமாகக் கடந்துசெல்ல **ஜாக்கிரதை** மிகவும் அவசியம் என்று பேதுரு ஆரம்பத்திலேயே கூறுகிறார். பவுலும் இதேபோன்ற ஒரு காரியத்தைக் கூறும்போது, "**பிரயாசப்பட்டுப்** பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும்"[60] என்று கூறுகிறார். மிகுந்த கவனமும் கடின உழைப்பும் இல்லாமல் கிறிஸ்தவ இலக்கணத்தை நாம் பெற்றுக் கொள்வதில் வெற்றியடைய முடியாது.

பேதுரு கூறும் இந்த நிலையை ஓர் ஆப்பிள் விதை, ஓர் ஆப்பிள் பழமாக மாறுவதற்கு ஒப்பிடலாம். இருதயத்தில் ஊன்றப்படும் தேவ வார்த்தையே விதையாகும். இது

விசுவாசத்தை உருவாக்குகிறது. இதுவே ஆரம்பமாகும். விசுவாசத்தின் மூலம் ஏழுவிதமான நிலையை அடையலாம்.

முதலாவது நிலை ‘‘தைரியம்’’[61], அல்லது ‘‘நீதியின் மேன்மை.’’[62] கிரேக்க மொழியில் இந்த வார்த்தை எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குவதைக் குறிப்பதாக உள்ளது. ஒரு பானை வனைவதிலோ, படகை செலுத்துவதிலோ, அல்லது புல்லாங்குழல் வாசிப்பதிலோ, அனைத்திலும் சிறந்து விளங்குவதைக் குறிக்கிறது. எனவே இது வாழ்க்கையின் சிறந்த நற்குணத்தை மட்டும் குறிப்பதாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை என நான் கருதுகிறேன். வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்கும் இது பொருந்தும்.

ஓர் ஆசிரியர் கிறிஸ்துவினிடம் வரும்போது அவர் **சிறந்த** ஆசிரியராகிறார். அதுபோன்றே இயேசுவிடம் வரும்பொழுது ஒரு தாதிப்பெண் **சிறந்த** தாதிப் பெண்ணாகிறாள். ஒரு கிறிஸ்தவ வியாபாரி தனது வியாபாரத்தில் சிறந்து விளங்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் சாக்குப் போக்குக்கோ அல்லது சோம்பேறித்தனத்திற்கோ இடம் கிடையாது. மிகவும் ஆபூர்வமாய் உலகப்பிரகாரமான காரியங்களில் தோல்வியடைந்த ஒருவன் தேவன் ஆவிக்குரிய பிரகாரமாக வெற்றியுள்ளவனாக்குகிறார். கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் (உலகப்பிரகாரமாக) அநேகத்தில் அநீதியுள்ளவனாக (ஆவிக்குரிய காரியங்களில்)[63] இருப்பான்.

ஆவிக்குரிய முன்னேற்றத்தின் இரண்டாவது நிலை **ஞானமாகும்**. ஞானத்தில் பல வகையுண்டு. வேதத்தில் குறிப்பிடப்படும் ஞானமானது புத்தக அறிவு மட்டுமல்ல, நடைமுறைக்கும் ஏற்றது. அது **கிரியை செய்யும்** ஞானம். தத்துவ ஞான பின்னணியிலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட எனக்கு வேதாகமத்தில் என்னைக் கவர்ந்த காரியம் இதுதான். இது மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாயுள்ளது!

வேத வாக்கியங்களில் நமக்கு கிடைக்கும் உதாரணம் இயேசுவின் போதனைகள். “இறையியல்” (Theology) என்பதன் கீழ் அவைகள் அமையவில்லை. அவருடைய போதனைகள் யாவும் அனைவரும் அறிந்த நடைமுறை வாழ்க்கைக்கு உகந்ததாக அமைந்திருந்தது: விதை விதைப்பது, மீன் பிடிப்பது, கால்நடைகளைப் பராமரிப்பது.

வேத வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் ஞானமே கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகத் தேவையான ஞானமாகும். இதுவும் நடைமுறைக்கு ஏற்றதாகும். இதற்கு ஒழுங்கான முறையான வேதவாசிப்பு அவசியம். ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனம் உள்ளவைகளாயிருக்கிறது.''[64]

சிறந்த கிறிஸ்தவர்களாகத் தாங்கள் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் அநேகர் ஒருமுறை கூட வேதத்தைப் படித்து முடிக்கவில்லை என்பதை அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். அப்படிப்பட்ட மக்கள் தங்கள் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குத் தாங்களாகவே ஒரு எல்லையை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

ஞானத்திற்குப் பிறகு வருவது **இச்சையடக்கம்** ஆகும். இதைச் **சுய ஒழுக்கம்**[65] என்றும் கூறலாம். இதன்மூலம் ஒரு கிறிஸ்தவன் தன்னை ஒரு உண்மையான **சீஷனாக** நிருபிக்க வேண்டும். ஒரு சபை உறுப்பினராக மட்டுமல்ல ஒரு உண்மையான **ஒழுக்கமுள்ளவனாக** இருக்கவேண்டும்.

நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் இந்த ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும் - உணர்ச்சிகள், நமது நிலைப்பாடுகள், நமது தேவைகள், நமது யோசனைகள் - இது நமது செயல்களை மட்டுமல்ல - மிக முக்கியமாக நமது உணர்ச்சி வெளிப்பாடுகளையும் - அது ஆளுகை செய்ய வேண்டும்.

இந்த வகையான ஒழுக்கத்தை நாம் நம் வாழ்க்கையில் நன்கு வளர்த்துக் கொள்ளாதவரை, அடுத்த நிலையாகிய பொறுமைக்குள் நாம் கடந்துசெல்ல முடியாது. நமது ஆள்தத்துவத்தின் ஒழுக்கமற்ற மற்றும் பெலவீனமான பகுதிகளை வெளிப்படுத்தும் சோதனைகளையும் பரீட்சைகளையும் மேற்கொள்ளும் சக்தி படைத்தது இந்தப் பொறுமையாகும். ஏன் சில கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய

வாழ்க்கையில் ஒரு நிலைக்குமேல் அவர்களால் வளரமுடியாததற்கு இதுதான் காரணம் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் இந்த இரண்டு முக்கிய தேவையான காரியங்களாகிய இச்சையடக்கத்தையும் பொறுமையையும் அவர்கள் கைக்கொள்வதில்லை. எதிராளிகளின் **எதிர்ப்பு** என்னும் காற்றினால் பூக்கள் விழுந்துவிடுவதும் இளம் பழங்களை **நிராகரிப்பு** என்னும் உறைபனி அழித்துவிடுவதும் ஆப்பிள் மரத்தின் உவமையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மூன்று கடைசி நிலைகள்

கடைசி மூன்று நிலைகளிலுமே ஒரு கிறிஸ்தவனின் குணாதிசயம் வெளிப்படுகிறது. தேவனை மையமாகக் கொண்டுள்ள ஒருவனுடைய வாழ்க்கைதான் **தெய்வீகத் தன்மை** கொண்டதாக இருக்கும். அப்படிப்பட்ட மனிதன் தேவனுடைய பாத்திரமாகச் செயல்படக் கூடும். அப்படிப்பட்ட மனிதன் எங்கு சென்றாலும், அந்தச் சூழ்நிலை இரம்மியமானதாகவும் சிறந்த வாசனை நிறைந்ததாகவும் மாறும். அங்கு பிரசங்கமோ அல்லது வேறு மார்க்கசம்பந்தமான நிகழ்ச்சிகளோ இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் மக்கள் நித்தியத்திற்கடுத்தக் காரியங்களில் ஆர்வமுள்ளவர்களாக மாறுவர்.

காலஞ்சென்ற பிரிட்டிஷ் சுவிசேஷகர் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார். மார்க்கசம்பந்தமே இல்லாத சூழ்நிலையில் கூட தேவனுடைய பிரசன்னத்தை உணரமுடியும் என்பதற்கு அவர் ஒரு உதாரணத்தைக் கூறுகிறார். தேவனுடைய சமுகத்தில் தனிமையில் சிறிது நேரம் செலவழித்தபின்பு ஸ்மித் ஓர் இரயில் பெட்டியில் அமர்ந்திருந்தார். அவர் ஒரு வார்த்தையும் பேசாமல் இருக்கும்போதே அவருக்கு எதிராக அமர்ந்திருந்த, முன்பின் தெரியாத ஒரு மனிதன் அவரைப் பார்த்து, "உங்களுடைய பிரசன்னத்தால் நான் பாவி என்று உணருகிறேன்" என்று கூறினார். பின்னர் ஸ்மித் அவரைத் தேவனிடம் வழி நடத்தினார்.

கடைசி இரு நிலைகளும் தேவனுடைய இருவிதமான அன்பை வெளிப்படுத்துகிறது. முதலாவது - **சகோதர சிநேகம்**

இயேசுகிறிஸ்து நம் உடன் விசுவாசிகளை எப்படி பாவிக்கவேண்டுமென்று விரும்புகிறார் என்பதை விவரிக்கிறது. அதாவது, அவர்களைத் தேவனுக்குள் நம் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் பாவிக்க வேண்டும்.

நான் முதலில் இந்த ஆவிக்குரிய வளர்ச்சியின் ஏழு நிலைகளைப் பற்றித் தியானிக்கையில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்க வேண்டிய அன்பாகிய "சகோதர சிநேகம்" கடைசி நிலைக்கு முந்திய நிலை என்று நினைத்தேன். ஆனால் வேதம் தெளிவாகக் கூறுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் உணர்வுப்பூர்வமாக மார்க்கசம்பந்தமான ஒரு நிலையை வெளிப்படுத்த வேண்டுமென்பதற்காக அவ்வாறு கூறப்படவில்லை. எனது ஐம்பது ஆண்டுகாலங்களில், பலவிதமான கிறிஸ்தவ மக்களோடு உள்ள தொடர்பினை வைத்து, ஒன்றைக் கூற விரும்புகிறேன். அது உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கலாம்: **கிறிஸ்தவர்களுக்கு ஒருவரை ஒருவர் நேசிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.**

இதனை இரண்டாயிரம் வருட சபை சரித்திரம் தெளிவுபடுத்துகிறது. ''உண்மையான சபைகள்'' என்று சொல்லிக் கொள்ளும் சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்குள் கூட ஒருவருக்கொருவர் எதிர்ப்பு தெரிவிக்கும் அணிகள் இருக்கின்றன. இவர்களுக்குள் கசப்பான போராட்டங்களும் வெளிப்படையான வெறுப்புகளும் இல்லாமல் ஒரு நூற்றாண்டு கூட கடந்து சென்றது கிடையாது.

ஒரு மனிதன் பாவத்தை அறிக்கையிட்டு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டதாகக் கூறுவதனால் அவனுடைய முழு குணாதிசயமும் மாறிவிடும். உடனடியாக மாறிவிடும் என்று கூற முடியாது. உண்மையாகவே ஒரு மாற்றம் உருவாக ஆரம்பித்தாலும் அம்மனிதனுடைய சுபாவத்தின் ஒவ்வொரு நிலையிலும் மாற்றம் ஏற்பட பல வருடங்களாகலாம்.

கோலியாத்தைக் கவணில் கல் வைத்துச் சுழற்றி அடிக்கத் தாவீதுக்கு கூழாங்கற்கள் தேவைப்பட்டபோது அவர் பள்ளத்தாக்குக்குச் சென்றார் - தாழ்மையின் கீழ்நிலை - அந்த ஓடையில் அவருக்குத் தேவையான கற்கள் அகப்பட்டன.[66]

அவைகள் எப்படி பளபளப்பாக இருந்தன? இரண்டு வகையான அழுத்தங்கள்: முதலாவது, தண்ணீர் அவற்றின்மீது ஓடியது; இரண்டாவது, தொடர்ந்து அவைகள் ஒன்றன் மீது ஒன்று மோதிக் கொண்டது.

இவ்வாறுதான் கிறிஸ்தவ குணாதிசயம் உருவாகிறது. முதலாவது, தொடர்ச்சியாகத் ‘‘திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்பட வேண்டும்.’’[67] இரண்டாவதாக, அவைகள் “பளபளப்பாக” மாறும் வரை கரடுமுரடான பகுதிகள் தேய்க்கப்பட வேண்டும்.

இடைச்செருகலாக இதைச் சொல்ல விழைகிறேன். இயேசுவுக்கு பளபளப்பான ‘‘ஜீவனுள்ள கற்கள்’’ தனது கவணுக்குத் தேவைப்படும் வரை, அவரும் தாழ்மையின் பள்ளத்தாக்குக்குச் சென்றார். தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும் மற்ற விசுவாசிகளுடன் உள்ள ஐக்கியத்தினால் ஏற்படும் அழுத்தங்களினால் “பளபளப்பாக்கப்பட்ட” கற்களை அவர் தெரிந்து கொள்ளுகிறார்.

ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளம் என்னவென்றால் நம் உடன் விசுவாசிகளை நேசிப்பதாகும். அவர்களுக்காக இரத்தத்தைச் சிந்தின இயேசு அவர்களுக்கு எப்படிப்பட்டவராக இருக்கிறாரோ அதனடிப்படையில் நேசிக்க வேண்டும்.

ஆவிக்குரிய வளர்ச்சியின் கடைசி நிலை - **அகாப்பே (agape) அன்பு** - கிறிஸ்தவ குணாதிசயத்தின் முழு முதிர்ச்சி அடைந்த, கனி கொடுக்கும் நிலையாகும். இது நம்முடைய உடன் விசுவாசிகளோடு நின்றுவிடுவதல்ல. நன்றியற்றவர்களுக்கும் பரிசுத்தமில்லாதவர்களுக்கும் காட்டப்படும் தேவனுடைய அன்பாகும். இந்தத் தேவனுடைய அன்பு நம்மை இவ்வாறு நடக்கச் செய்கிறது, ‘‘உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.”[68]

இத்தகைய அன்பையே கிறிஸ்து, தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களைப் பார்த்து ஜெபிப்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார், ‘‘பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.”[69]

இதே அன்புதான் ஸ்தேவானையும் தன்னை கல்லெறிந்தவர்களைப் பார்த்துக் கூற வைத்தது, “ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்றார்.”[70]

இதே அன்புதான் விசுவாசிகளைத் துன்பப்படுத்தின சவுலை கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பவுலாக மாற்றியது. அவர், “எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்”[71] என்று கூறுகிறார்.

என்னைப் பொறுத்தவரை, ஆவிக்குரிய கனியின் முழு முதிர்ச்சியடைந்த நிலையைக் கண்ணுரும்போது, நான் என்னைத் தாழ்த்துவது மட்டுமல்ல, உணர்ச்சிப் பெருக்கெடுக்கிறேன். நான் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டுமென்பதற்காகத் தாழ்த்துகிறேன். இந்த உலகம் தரமுடியாத அழகான ஒரு காட்சியைத் தேவன் எனக்குக் காட்டியதற்காக உணர்ச்சிப்பெருக்கெடுக்கிறேன்.

பவுல் கூறும் வார்த்தைகளையே நானும் கூறுகிறேன்: ‘‘அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.”[72]

அடிக் குறிப்புகள்

அத்தியாயம் 1

அவர் ஒரு ஆள்தத்துவமுள்ளவர் - மற்றும் ஆள்தத்துவமற்றவர்

1. ஆதியாகமம் 1:1
2. ஏசாயா 6:8
3. ஆதியாகமம் 1:2
4. 1 கொரிந்தியர் 8:1

அத்தியாயம் 2

நித்தியமானவர், அனைத்தையும் அறிந்தவர், எங்கும் வியாபித்துள்ளவர்

5. வெளிப்படுத்தின விசேஷம் 4:8
6. மத்தேயு 10:30
7. யோனா 4:6-7
8. எபிரெயர் 4:13
9. யோவான் 6:69
10. யோவான் 6:70-71
11. யோவான் 13:21-30
12. வெளிப்படுத்தின விசேஷம் 21:6
13. ரோமர் 8:29
14. 2 பேதுரு 3:9
15. எபிரெயர் 13:5
16. யோவான் 14:26
17. யோவான் 14:26

அத்தியாயம் 3

சுத்திகரிக்கும் வேலையாள் - பட்சிக்கிற அக்கினி

18. யோவான் 15:26

19. யோவான் 16:13

20. யோவான் 16:14

21. யோவான் 14:13

22. வெளிப்படுத்தின விசேஷம் 4:5

23. எபிரெயர் 12:29

24. எபிரெயர் 12:28

25. சங்கீதம் 19:9

26. லேவியராகமம் 9:23-24

27. 2 நாளாகமம் 7:1-2

28. 1 இராஜாக்கள் 18:38-39

29. லேவியராகமம் 10:1-2

30. எபிரெயர் 12:28

31. எபேசியர் 2:18

அத்தியாயம் 4

சத்திய ஆவி

32. யோவான் 14:16-17

33. ரோமர் 1:18

34. வெளிப்படுத்தின விசேஷம் 12:9

35. யோவான் 14:6

36. யோவான் 17:17

37. 1 யோவான் 5:6

38. 1 யோவான் 5:6

39. 1 தெசலோனிக்கேயர் 1:5

40. யோவான் 8:44

41. அப்போஸ்தலர் 5:3-5

42. யோபு 42:7

43. 2 சாமுவேல் 12:1-15

44. மத்தேயு 21:11

45. நீதிமொழிகள் 28:13

46. 1 யோவான் 1:9

47. தானியேல் 4:27

48. 1 யோவான் 5:17

அத்தியாயம் 5

ஆவியின் வரங்கள்

49. 1 கொரிந்தியர் 1:7

50. 1 கொரிந்தியர் 13:8-10

51. 1 கொரிந்தியர் 15:19

52. ரோமர் 11:29

53. மத்தேயு 7:20

54. மத்தேயு 7:21-23

55. 1 தீமோத்தேயு 5:22

56. 1 தெசலோனிக்கேயர் 4:3

57. எபிரெயர் 12:14

அத்தியாயம் 6

ஆவியின் கனி

58. லேவியராகமம் 19:23-25

59. ஆதியாகமம் 1:12

60. 2 தீமோத்தேயு 2:6

61. 2 பேதுரு 1:5

62. 2 பேதுரு 1:5

63. லூக்கா 16:10

64. 2 தீமோத்தேயு 3:16-17

65. 2 தீமோத்தேயு 1:7

66. 1 சாமுவேல் 17:40

67. எபேசியர் 5:26

68. மத்தேயு 5:44

69. லூக்கா 23:34

70. அப்போஸ்தலர் 7:60

71. 1 கொரிந்தியர் 9:22

72. பிலிப்பியர் 3:13-14

நூலாசிரியரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் ஐரோப்பிய பெற்றோர்களுக்குப் பிறந்தார். இங்கிலாந்தில் உள்ள ஈட்டன் கல்லூரியிலும் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் கிரேக்கம், எபிரெயம் ஆகிய மொழிகளில் அறிஞராக கடந்த கால தற்கால தத்துவ ஞானத்தில் உதவித்தொகை பெற்று கிங்ஸ் கல்லூரியில் பணிபுரிந்தார். கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் எருசலேமில் உள்ள எபிரெய கலாசாலையிலும் எபிரெயம் அராமியம் போன்ற மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஐரோப்பிய இராணுவத்தில் பணிபுரியும்பொழுது வேதத்தைப் படிக்க ஆரம்பித்த பொழுது இயேசு கிறிஸ்துவின் சந்திப்பினால் வாழ்க்கை மாறுகின்ற அனுபவத்தைப் பெற்றார். இந்த அனுபவத்தின் அடிப்படையில் இரு தீர்மானங்களைச் செய்தார். முதலாவது இயேசு உயிருடன் இருக்கின்றார்; இரண்டாவது வேதம் உண்மையும் நம்பத்தக்கதும் காலத்திற்கு ஏற்றதுமாய் உள்ளது என்பதாகும். இவ்விரு தீர்மானங்கள் அவரின் வாழ்க்கையின் போக்கையே மாற்றியமைத்தது. பின்பு வேதத்தைக் கற்பதற்கும் போதிப்பதற்கும் தன்னை ஒப்புக்கொடுத்தார். டெரிக்கின் வேதாகமத்தை எளிய முறையில் போதிக்கும் ஆற்றல் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் விசுவாச அடித்தளத்தை அமைத்தது. அவரின் சபை பாகுபாடற்ற (non-sectarian) காலத்திற்கேற்ற போதனா முறை பல இனத்தவருக்கும் மதப் பின்னணியினருக்கும் உதவிற்று.

அவர் 50 நூல்களையும் 600 ஒலி நாடாக்களையும் 100 வீடியோ போதனைகளையும் வழங்கியுள்ளார். அவருடைய அநேக புத்தகங்கள் 100 மொழிகளுக்கு மேல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவருடைய வானொலிச் செய்திகள் அராமியம், சீன மொழி (அமாய், கன்டோனிஸ், மாண்டரின், ஷாங்காய், ஸ்வேடோ) மற்றும் குரோசியன், ஜெர்மன், மலஹாசி, மங்கோலியன், ரஷ்ய மொழி, சமோவன், ஸ்பானிய மொழி, டோங்கன் போன்ற மொழிகளில்

மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்படுகிறது. இந்த வானொலிச் செய்திகள் உலகமனைத்திலுமுள்ள அநேகருடைய வாழ்வை வளப்படுத்தியுள்ளது.

இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்வரை டெரிக் பிரின்ஸ் ஊழியம் 140 நாடுகளில் உள்ள விசுவாசிகளுக்குப் பயனுள்ளதாக போதனை அளித்து வருகிறது. இது டெரிக் பிரின்ஸின் உலக முழுவதிலும் உள்ள 30 அலுவலகங்கள் மூலம் பிரதானமாக ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாண்டு, நியூசிலாந்து, நார்வே, ருஷ்யா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து வல்லரசு, அமெரிக்கா, இந்தியா போன்ற இடங்களிலிருந்து அளிக்கப்படுகிறது. இந்த ஊழியம் பற்றிய சூடான செய்தியினை அறிய <www.derekprince.com>என்னும் இணையதளத்தைக் காணவும்.

டெரிக் பிரின்ஸின் மற்ற தமிழ் புத்தகங்கள்

1. தேவனின் மருந்து புட்டி ரூ.25/-
2. உங்களில் உள்ள தூய ஆவியானவர் ரூ.30/-
3. தெய்வீகப் பரிமாற்றம் ரூ.20/-
4. சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல் ரூ.40/-
5. ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள் நீ தெரிந்து கொள்ளலாம் ரூ.85/-
6. வாழ்வளிக்கும் விசுவாசம் ரூ.60/-
7. அவர்கள் பிசாசுகளைத் துரத்தவார்கள் ரூ.100/-
8. ஆவிக்குரிய போராட்டம் ரூ.35/-
9. ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல் ரூ.25/-
10. அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் ரூ.25/-
11. சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள் ரூ.60/-
12. பிசாசுகளைத் துரத்துவார்கள் ரூ.20/-
13. நீதியான வாழ்க்கைக்கு அடித்தளங்கள் ரூ.230/-
14. விட்டுக்கொடுத்தலின் கிருபை ரூ.30/-
15. வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல் ரூ.110/-
16. அறிக்கையிடுதலின் ஆற்றல் ரூ.65/-
17. சோதிக்கப்படுதல் ரூ.25/-
18. வாழ்வின் கசப்பான ஊற்று ரூ.30/-
19. அளவற்ற பேரன்பு ரூ.30/-
20. உங்கள் பணத்தைக் குறித்த தேவ திட்டம் ரூ.35/-
21. தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால் ரூ.35/-
22. லூசிபரின் சுய ரூபம் ரூ.130/-

Write for a free catalogue of Books, Teaching DVDs VCDs and MP3s of Derek Prince

DEREK PRINCE MINISTRIES - INDIA,

18/32, Mangammal Salai,

Renga Nagar,Trichy - 620 021,

Tamil Nadu, India.

Phone: 00 - 91 - 431 - 2459464 /2457181

E-mail: rhema@derekprince.in